ISSN 1391-9504

# விஜய்

Wijey - විජෙයි

18-07-2005 - மலர் 02, இதழ் 09

13/7/2005



## ஆவணங்களை பாதுகாப்பது எப்படி?



## புரட்சியாளன் நெப்போலியன்!

விலை ரூபா: 10/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச் சோலை

கவிச் சித்திரங்கள் 16

தயாரிப்பு: நவசீலன்

# கல்வியும் நற்பண்பும்

கம்பரின் உதவியாளன் என்று கூறிக்கொண்டு வந்தவரும் சவரம் செய்பவனும் அரசவையில் வந்து வணங்கி நின்றதும் அவர்களைப் பார்த்து அரசன் "என்ன விஷயம்?" என்று கேட்டார். கம்பர் அரசரைப் பார்த்து "அரசே! என் தம்பி இருபது வருட காலம் தன் முறைக்குத் தங்களுக்கு ஊழியம் செய்து வந்துள்ளான். இனி என் முறைக்கு இருபது வருட காலம் நான் தங்களுக்கு ஊழியம் புரியத் தங்களிடம் உத்தரவு பெற வந்துள்ளேன்" என்று கூறினார். அரசரும் கம்பரை நோக்கி, "நல்லது. உன் விருப்பப்படியே ஆகட்டும்" என்று கூறினார்.

அதன் பின்னர் கம்பர் அன்னை கலைவாணியை மனதில் தியானித்து "தாயே கலைவாணி இந்த ஆபத்துக் காலத்தில் அடியேனைக் கைவிடாமல் அருள் புரியும் வகையில் திருவுளம் இரங்கி உமது இடப்பாதச் சிலம்பை அருளிச் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

அவர் பிரார்த்தனைப் படி நாமகள் அனுக்கிரகத்தால் அன்னை கலைவாணியின் சிலம்பு கம்பரிடம் வந்திருக்க, அதனைக் கொண்டு போய்ச் சேர மன்னனிடம் காட்டினார். அது "தக, தக" வென்று கண் கூசும் படி ஜொலிப்பதைக் கண்டு அரசன் "இது ஏது." என்று கேட்டார்.

அதற்குக் கம்பர் "அரசே இந்தச் சவரம் செய்பவனும், நானும் சிற்றப்பன், பெரியப்பன் பிள்ளைகள். இவன் தகப்பனும் என் தகப்பனும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். இவர்கள் குடும்பத்துக்கும், எங்கள் குடும்பத்துக்கும் ஏற்பட்ட சிறு கலகத்தினால் இவர்களும், நாங்களும் பிரிந்து விட்டோம். எங்கள் பெரியவர்கள் அந்தக் காலத்தில், தங்களைப் போன்ற பிரபுக்களுக்கு ஊழியம் செய்ததால் அன்பளிப்பாகக் கிடைத்த இந்த விலை உயர்ந்த சிலம்புகளை மட்டும் நானும், என் தம்பியும் ஆளுக்கு ஒன்றாகப் பிரித்து எடுத்துக் கொண்டோம். எளியவர்களான எங்களுக்கு இந்த விலை உயர்ந்த சிலம்பு எதற்கு, இதனையும் என். தம்பியிடமுள்ள மற்றச் சிலம்பையும் தங்களின் பத்தினியாகிய அரசி அவர்கள், அவர்களுடைய அழகிய கால்களில் அணிந்து கொண்டால் நாங்கள் கண்குளிரத் தரிசிப்போம்" என்று கூறினார். அரசன் அந்த ஒற்றைச் சிலம்பைக் கையில் வாங்கிப் பார்த்து வியப்படைந்து "அடடா எவ்வளவு அழகான சிலம்பு. எங்கே உன்னிடமுள்ள சிலம்பையும் கொண்டு வா பார்ப்போம்" என்று சவரம் செய்பவனுக்கு உத்தரவிட்டார்.

அவன் "இது என்ன? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல் இருக்கிறதே!" என்று கை, கால் நடுங்க, வாய் குழற "என்னிடம் அப்படி ஒரு சிலம்பு இல்லைச் சுவாமிஜி" என்று கூறினான்.

கம்பர் அவரைப் பார்த்து "அட தம்பி அது நமக்கேன்? அம்மா காலில் அணிந்தால் தான் அதற்கு மதிப்பு. கொடுத்து விடு" என்றார். அவன் "இல்லை அண்ணா" என்றான். அந்தச் சந்தர்ப்பத்தில் அரசரின் அருகிலிருந்த அரசி அந்தச் சிலம்பைத் தனக்கு வாங்கித் தர வேண்டும் என்று சமிக்ஞை காட்டினார். அரசன் மீண்டும் அந்தச் சிலம்பைக் கொண்டு வா" என்று வற்புறுத்தினார். அவன் முன்னர் சொன்னது போலவே "என்னிடம் இல்லை" என்று கூறினான்.

அது கேட்டுக் கம்பர் 'அட தம்பி கள்ளிக்கு, முள் வேலியும், கழுதைக்கு கடிவாளமும் எதற்கு? சவரம் செய்பவர்களாகிய நமக்கு விலை மதிப்புள்ள சிலம்பு எதற்கு, குடிப்பது கூழ். கொப்பளிப்பது பன்னீரா? நமக்கு வேண்டாம் அந்தச் சிலம்பு. எடுத்துக் கொடுத்து விடு?' என்று கூறனார்.

எதற்கும் அவன் "சத்தியமாக என்னிடம் இல்லை" என்றான். அரசர் அப்போது "அவன் தன்னிடம் சிலம்பு இல்லை என்கிறானே. என்ன காரணம்?" என்று கேட்டார். அதற்குக் கம்பர் "அரசே இவன் எனது தம்பி தான். இருந்தாலும் மிகுந்த சுயநலக்காரன். சிறு வயதில் கூட இப்படித்தான் பொய்ச் சத்தியம் செய்வான். இப்படிச் சாந்தமாகக் கேட்டால் கொடுக்க மாட்டான். மயிலே, மயிலே இறகு போடு என்றால் போடுமா? அது போல இவனிடம் கேட்கும் முறையில் கேட்க வேண்டும்" என்று கூறினார்.

அடுத்த கணமே அரசனின் ஆணைப்படி புளியம் குச்சிகள் கொண்டு வரப்பட்டன. சேவகர்கள் அவனைப் பிடித்துக் கம்பத்தில் கட்டி இரத்தம் ஒழுகும் வகையில் அடித்தனர். அவன் வலி பொறுக்க முடியாமல் "கட்டை அவிழ்த்து விட்டால் உண்மையைச் சொல்கிறேன்". என்று கூறினான். சேவகர்களும் அவனை அவிழ்த்து விட்டனர். அவன் உடனே-

"மகா பிரபுவே! இவர் என் அண்ணனும் அல்ல. நான் இவர் தம்பியும் அல்ல. இவருடைய பூர்வீகம் என்னவென்றே எனக்குத் தெரியாது. இந்த அரசவை வித்துவான்கள் இவர் மீதுள்ள பொறாமையால் [illegible] பணம் கொடுத்து இவருடைய தம்பியாக நடிக்கச் சொன்னார்கள். இவர்கள் எனக்கு எழுதிக் கொடுத்த உடன்படிக்கை இருக்கிறது. பாருங்கள்?" என்று கூறி உடன்படிக்கைப் பத்திரத்தை அரசனிடம் கொண்டு வந்து கொடுத்தான்.

சேர மன்னர் அது கேட்டு "இது. இவனால் ஏற்பட்டது அல்ல. வித்துவக் காய்ச்சலால் ஏற்பட்டது" என்று சவரம் செய்பவன் மீது ஏற்பட்ட கோபத்தைத் தணித்துக் கொண்ட பின், அந்த வித்துவான்கள் மீது கோபம் கொண்டு அவர்களை எல்லாம், சிரச்சேதம் செய்ய நினைத்தான். அதையறிந்த வித்துவான்கள் இந்தத் தண்டனையில் இருந்து எப்படித் தப்புவது, பொறாமை காரணமாக அல்லவா நமக்கு இந்தக் கதி ஏற்பட்டது என்று அவர்கள் யாவரும் கூடி, ஆலோசித்தும் தப்புவதற்கு எந்த உபாயமும் காணாமல் தங்கள், தங்கள் மனைவிமாரைக் கம்பரின் உதவியாளர் என்று கூறிக் கொண்டவரின் காலில் போய் விழுந்து மன்னிப்புக் கேட்கும்படி அனுப்பினார்கள்.

அந்தப் பெண்கள் தலைவிரி கோலமாகப் போய், முந்தானையை விரித்துக் கம்பரின் காலில் விழுந்து தமக்கு மாங்கல்யப் பிச்சை தர வேண்டும் என்று அழுது புலம்பினார்கள். அவர்களின் துன்பத்தைக் கண்டு மனமுரு[illegible] கம்பர் அவர்களின் அழுகுரலைக் கேட்[illegible] "பாக்கியவதிகளே! அழ வேண்டாம், உங்கள் கணவன்மார்களின் உயிரை நிச்சயம் காப்பாற்றுவேன். அஞ்சாமல் இருங்கள்" என்று சத்தியம் செய்து அனுப்பினார்.

பின்னர் கம்பர் அரசரிடம் போய், "மகாராஜாவே, உலகத்தில் மாதா, பிதா, குரு, புரோகிதர், புராணிகள், வேதப்பிராமணர், தவசிகள், வித்துவ சனர், விகடகவிகள், சுத்த வீரர்கள், தானாபதிகள், தூதர்கள், சுற்றத்தார், பிணியாளர், வறியவர்கள், பாலர்கள், அடைக்கலம் புகுந்தோர், போகமாதர் என்று இந்தப் பதினெட்டுப் பேர்களும் செய்த குற்றத்தைப் பாராட்டி, அதற்காக அவர்களைத் தண்டிப்பது அரசர்களுக்கு மனுநீதியாகாது. அதனாலும், மேலும் அவர்களும் நானும் வித்துவான்களாக இருப்பதனால் அவர்களுக்கு வந்த அவமானம் எனக்கும் வந்ததாகும். ஆதலால் தாங்கள் கிருபை கூர்ந்து அவர்கள் தெரியாமல் செய்த குற்றத்தை மன்னிப்பதே தங்கள் கௌரவத்திற்கும் தயவுக்கும் தகுதியாகும்" என்று அரசரின் கோபம் தணியும் வகையில் கூறினார். அரசர் கோபம் தணிந்து விதித்த தண்டனையை மன்னித்து விட்டுக் கம்பரை நோக்கி "இந்தப் பெறுமதி மிக்க சிலம்பு உங்களுக்கு எப்படிக் கிடைத்தது" என்று கேட்டார்.

கம்பர் "கேளுங்கள் அரசே, இந்தச் சிலம்பை அணியும் அன்னையைத் தரிசிக்கும் விருப்பம் தங்களுக்கு இருக்குமானால் அவர்களை அழைப்பிக்கிறேன்" என்று கூறிப் பந்தல் போட்டுச் சந்தனத்தை, பன்னீரில் குழைத்து மெழுகி நவரத்தினப் பொடிகளால் கோலமிட்டு இன்னும் பல விதங்களில் சிறப்பித்து அன்னையின் அருள் வேண்டிப் பாடினார். அப்பொழுது வலது கையில் வீணையும், இடது கை அபிநயிக்கவும், ஒற்றைக் கால் சிலம்பு "கலீர், கலீர்" என ஒலிக்க அன்னை கலைவாணி அங்கு தோன்றி அற்புத நடனமாடினார்.

அதனை அரசன் போன்ற பெரியோர்கள் கண்டு சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி பரமானந்தத்தால் பரவசமடைந்தார்கள். அப்பொழுது நாமகள் "எங்கடா கம்பா சிலம்பு" என்று கேட்டார். உடனே கம்பர் அரசன் கையிலிருந்த சிலம்பை [illegible] அன்னையின் இடப் பாதத்திற்கு நேரே நீட்டினார். அது அந்த திருவடியில் போய்ச் சேர்ந்ததும், அன்னை கலைவாணி அங்கிருந்து மறைந்தார்.

பிறகு சேர மன்னர் கம்பரை நோக்கி, "தேவரீர், தாங்கள் யார்? உண்மையைக் கூற வேண்டும்" என்று வேண்டினார். கம்பர், தான் கம்பர் என்பதனையும், தனக்கும், சோழ மன்னனுக்கும் இடையில் ஏற்பட்ட விரோதத்தையும், அதன் பின்னர் சோழ நாட்டை விட்டு வந்ததையும் விளக்கமாகக் கூறினார்.

அதைக் கேட்ட சேர மன்னர், பெருமகிழ்ச்சியும், வியப்புமடைந்து, அவரை முன்னையும் விட, மிகவும் சிறப்பாக அவையில் வைத்திருந்தான்.

"மகா வித்துவானாகிய கவிச்சக்கரவர்த்தி கம்பர் தம்முடைய நற்குணங்கள் காரணமாகவும் போற்றிப் புகழப்படுவதுடன், உலகினருக்கு வழிகாட்டியாகவும் திகழ்கிறார்.

(அடுத்த இதழில் கம்பகருக்குக் கிடைத்த கௌரவம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல:08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2314714
பெக்ஸ்: 2314968

## நேரத்தைக் கணித்துச் செயற்படுதல்

நம் அன்றாட வாழ்வில் 'நேரம்' என்ற விடயம் எத்தகைய முக்கியத்துவத்தினை வகிக்கின்றதென்பதனை நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை. நேரத்தை மாத்திரம் சரியாகப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டால் நாம் மிக உயர்வான இடத்தை அடையலாம் என நேர முகாமைத்துவ ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள்.

இன்றைய உலகில் பல பேர் எவ்வாறு பொழுதைச் சந்தோசமாகப் போக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போது இன்னும் கொஞ்சப் பேர் மிகக் கடுமையாக வாழ்க்கைக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று தத்தமது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக ஓய்வு ஒழிச்சல் இன்றிக் கஷ்டப்படுகின்றார்கள். ஒரு குறித்த பகுதியினர் மாத்திரம் உலகின் நன்மைக்காகவும், சமூகத்தின் உயர்வுக்காகவும், எதிர்காலப் பரம்பரையினருக்காகவும் சிந்தித்துச் செயற்படுகின்றனர்.

இவற்றை விட எண்ணற்றோர் தத்தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக நேரத்தை விடாது துரத்தத் தொடங்குகின்றனர். மாணவர்களுக்கு ஐந்து பாடங்களுக்குப் பரீட்சை எழுதப் பத்து நாட்களே அவகாசம் இருக்குமாயின் ஒரு பாடத்துக்கு இரண்டு நாட்களை ஒதுக்கிப் படிக்க வேண்டும். ஒரு நாளில் இருக்கும் 24 மணி நேர அவகாசத்தை உச்சமாகப் பயன்படுத்துவது எப்படி என்று திட்டமிட வேண்டும். ஏதேனும் குறித்த கால அட்டவணைக்குள் திட்டங்களை நிறைவேற்றத் தீர்மானிப்பவர்கள் செயற்பாடுகளை அட்டவணையாகத் தயாரித்துப் பகுதி, பகுதியாகப் பூர்த்தி செய்து இறுதிக்கட்ட இலக்கை உரிய கால நேரத்தில் அடைந்துவிட வேண்டும்.

'காலம் பொன்னானது' என்றொரு பழமொழி உண்டு. ஆதலால் தான் பலர் தமது காலத்தைக் கூடப் பணத்தால் மதிப்பிடுகின்றனர். சத்திர சிகிச்சை செய்யும் பிரபல மருத்துவர் தமது காலத்துக்கும், திறமைக்கும் சேர்த்து விலை நிர்ணயம் செய்கிறார். எத்தனை மணிநேரச் சத்திர சிகிச்சை என்பதைப் பொறுத்தே கட்டணமும் நிர்ணயிக்கப்படுகின்றது.

இன்றெல்லாம் ஒரு மனிதனின் சராசரி ஆயுட்காலம் 72 வருடங்களெனக் குறுகிப் போய்விட்டது. இந்த ஆயுட்காலத்தின் 1/3 பகுதியை, (நாளுக்கு 8 மணிநேரம்) நித்திரை செய்யச் செலவிட வேண்டும். ஆதலால் இதில் 48 வருடங்களே நாம் விழித்திருக்கும் நேரம்! இந்த 48 வருட காலத்தில் நாம் என்ன செய்கின்றோம், எப்படிச் செய்கின்றோம், ஏதாவது உயர்வான விடயத்தைச் செய்தோமா? ஏதாவது சாதனைகளைச் செய்தோமா? என்ற கேள்விகளுக்கான பதில்களே நாம் வாழ்ந்ததன் நோக்கத்தை அர்த்தமுள்ளதாக்கும்! அதற்கு நேரத்தைக் கணித்துச் செயற்படுதல் மிக இன்றியமையாததாக இருக்கும்.

- ஆசிரியர்

## பயத்தினால் தேர்ச்சி பெறத் தவறும் க.பொ.த (உ/த) பரீட்சார்த்திகள்!

க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 94 வீதமானோர் தாம் பரீட்சைகளில் சித்தியடையப்போவதில்லை என்ற மனோநிலையிலேயே பரீட்சைக்கு முகங்கொடுப்பதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளதாகக் கல்வி ஆணைக்குழு அறிவித்துள்ளது. அநேகர் இந்தப் பய உணர்வினாலேயே பரீட்சையில் தேற முடியாமல் போய்விடுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. உயர் தரப் பரீட்சையானது, பல்கலைக்கழக அனுமதிக்கான ஒரு பரீட்சையென எண்ணுவதனால் தான் அது இவர்களைப் பாதிக்கின்றது. அத்தோடு வரையறுக்கப்பட்ட ஒரு சில பாடங்களை வெவ்வேறு விதமாகக் கற்பிப்பதனால் மாணவர்கள் தமது பிரத்தியேகத் திறமைகளை வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்படுகின்றது. இதனால் இவர்கள் பல்கலைக்கழகம் சென்றாலும் பிடிப்பற்ற ஒரு நிலையில் காலங்கள் வீணடிக்கப்படுவது மாத்திரம் அங்கு நடக்கும். எனவே, முதலில் இந்த மாணவர்கள் மத்தியில் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாகக் கல்வி ஏற்பாடுகள் அமைய வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மாகாண சபைப் பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கான அனுமதி

### விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாள் ஜூலை 31

மாகாண சபைகளின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பப் பத்திரங்களை நிரப்பி அவ்வப் பாடசாலை அதிபர்களிடம் கையளிகுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதே வேளை, தேசிய மட்டப் பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு விண்ணப்பித்து அனுமதி வழங்கப்பட்டுள்ள பிள்ளையின் பெயர் விபரங்கள் ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் இணையத்தளத்தில் அறிவிக்கப்படவுள்ளமையால், மேற்படி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுப் பெயர் இடம் பெறாத பிள்ளைகளுக்கு மாகாண மட்டத்திலான பாடசாலையிலேனும் விண்ணப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கும் முகமாகவே மாகாண சபை நிர்வாகத்திலான பாடசாலைகளுக்கான விண்ணப்பம் கோரல் 1 மாதத்தால் தாமதப்படுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



## இயற்கை அனர்த்தச் சமிக்ஞைக் கருவி இந்தியாவில் பொருத்த ஏற்பாடுகள்!

இந்தியா உட்பட இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளிலும், இயற்கை அனர்த்தங்களை முன் கூட்டியே அறிந்து கொள்வதற்கான சமிக்ஞைக் கருவிகளைப் பொருத்துவதற்கு, யுனெஸ்கோ அதிகாரிகளினால் கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.



இவ்வாறான கருவியைப் பொருத்துவதன் மூலம் பூமி அதிர்ச்சி, கடற்கோள் (சுனாமி) போன்ற இயற்கை அனர்த்தங்கள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் ஏற்படப் போவதை முன் கூட்டியே அறிந்து கொள்ளக் கூடியதாக அமையும்.

மேற்படி சமிக்ஞைக் கருவிகளின் பிரதான கட்டுப்பாட்டு நிலையமானது இந்தியாவில் அமைக்கப்படும். இதனுடன் தொடர்புபடுத்தப்பட்ட சமிக்ஞை உபநிலையமொன்று இலங்கையிலும் அமைக்கப்படும். இயற்கை அனர்த்தங்களை முன் கூட்டியே அறியும் வழிமுறைகள் தொடர்பாக ஆராயும் மாநாடொன்றைக் கடந்த மார்ச் மாதம் பரிஸ் நகரில் யுனெஸ்கோ நிறுவனம் கூட்டியிருந்தது. பூமியதிர்ச்சி, கடற்கோள் (சுனாமி) போன்ற இயற்கைப் பேரழிவுகளை ஏற்படுத்தும் அனர்த்தங்கள் தொடர்பாக முன் கூட்டியே அறிவதற்கான சமிக்ஞைக் கருவிகளைக் கொடுத்துதவுவதற்கு இக்கூட்டத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் இலங்கை சார்பாக இலங்கை விஞ்ஞானிகள் குழுவொன்றும் கலந்து கொண்டிருந்தது.

இதன் அடிப்படையிலே இந்தியாவில் சமிக்ஞைக் கருவிகளின் மத்திய நிலையமொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தெரியவருகின்றது.

## பத்து வயதில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ள மாணவன்!

சீனாவைச் சேர்ந்த பத்து வயது மாணவன் ஒருவன் பல்கலைக்கழகத்திற்கான தெரிவில் சித்தி பெற்றுள்ளான். சீனாவில் மட்டுமன்றி உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் இந்த மாணவனின் திறமை குறித்துப் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளனவாம்.

குறிப்பாகப் பல்கலைக்கழகத்திற்கான நுழைவுத் தேர்வில் ஆகக் குறைந்தது 505 புள்ளிகள் எடுத்தாக வேண்டும் என அங்கு வரையறுக்கப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் இந்தப் பத்து வயது மாணவனோ இதையும் விட 47 புள்ளிகள் அதிகமாகப் பெற்று அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளான்.

சீனாவைப் பொறுத்த வரையில் ஆரம்பக் கல்வியை 6 ஆண்டுகளும், மேல் நிலைக் கல்வியை 3 ஆண்டுகளும் தொடர வேண்டும் என்பதே நியதியாகும். எனினும், இந்த மாணவன் தன்னிடம் காணப்பட்ட அசகாயத் திறமையின் காரணமாக, இவ்விரு காலகட்டங்களையும் ஒவ்வொன்றும் தலா 2 வருடங்கள் என்ற படி நான்கு வருடங்களுள் முடித்துவிட்டான்.

இம்மாணவனின் திறமைக்கு இவனது பெற்றோரின் ஊக்குவிப்பே காரணம் என அநேகர் பாராட்டுகின்ற அதே வேளை, தமது பிள்ளையிடமுள்ள தனித்திறமையின் காரணமாகவே இத்தகைய சாதனையை நிகழ்த்த முடிந்துள்ளதெனவும் அவனது பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பு, மஹாவத்தை புனித அந்தோனியார் தமிழ் வித்தியாலயத்தின் 60ஆம் ஆண்டு நிறைவு விழா!

கொழும்பு, மஹாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தமிழ் வித்தியாலயத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு தினம் கடந்த ஜூன் மாதம் 6 ஆம் திகதியன்று பாடசாலை அதிபர் அருட் சகோதரி பவளராணி அவர்களின் தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

கத்தோலிக்க மிசனரிமாரால் 1945 ஆம் ஆண்டில் ஒரு சிறிய கட்டிடத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டு உன்னதமான மாணவர்கள் பலரைச் சமூகத்திற்கு வழங்கியுள்ளமை இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அப்போஸ்தல கார்மேல் சபை அருட்சகோதரிகளால் பொறுப்பேற்று நடத்தப்பட்டு வருகின்ற இப்பாடசாலையின் பாடசாலை தினம் ஒவ்வொரு வருடமும் புனித அந்தோனியார் திருவிழாக் காலங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இதன் படியே இம்முறையும் அறுபதாம் ஆண்டு பாடசாலைத் தினம் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் அருட்தந்தை ஜெரால்ட் ரொசய்ரோ அடிகளாரால் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருப்பலிப் பூசையையடுத்து அருட்தந்தை அவர்கள் - அதிபர், ஆசிரியர், மாணவர்களால் 'பாண்ட்' வாத்தியம் இசைக்கப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார்.

மாணவர்கள் தத்தமது வகுப்பறையை அழகு பட அலங்கரித்து - அதிபர், ஆசிரியர்களை வரவேற்று விருந்துபசாரமும் வழங்கினர். சிறந்த அலங்கரிப்புக்களை மேற்கொண்ட வகுப்புக்கள், தெரிவு செய்யப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறுநீரகத்தில் கல் உண்டாதல்

உடற்கூற்று மற்றும் நரம்பியல் செயல் பாட்டில் இருதயம், நுரையீரல், பித்தாசயம், நாடி, நாளங்கள் போன்றே சிறுநீரகமும் முக்கியமான ஒரு உறுப்பாகும்.
ஆரம்பகால வாழ்க்கை முறையை விட இன்றைய மானிட வாழ்வு முறை முற்றிலும் மாறுபட்டதாகும். இன்றைய மனிதன் சூழலோடு ஒட்டியவனாக வாழ்ந்தாலும் இன்று மனிதன் ஒவ்வாத செயற்பாட்டுடன் ஒட்டிப் பிணைக்கப்பட்டவனாக வாழ்கின்றான்.

தேவைகள் விரிவடைந்து கொண்டிருப்பதால் கடின உழைப்பாளியாக மாறியுள்ளான். அதனால் இளையோர், முதியோர் அனைவரும் ஓய்வு இல்லாத அலுவல் மிகுந்த வாழ்க்கை முறையில் உள்ளனர். இந்தச் சூழ்நிலையில் உரிய நேரத்தில் உணவு உட்கொள்வதில்லை. சில சந்தர்ப்பங்களில் கடின உழைப்பாளியாக இருந்தாலும் போதியளவு நீர் அருந்தக் கூட நேரம் இல்லாத நிலையைக் காண்கின்றோம்.

அத்தோடு சூழல், பொருளாதார நிலை மாற்றத்திற்கு ஏற்ப முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட (Ready Made) உணவு வகைகளுக்குப் பழக்கப்பட்டுள்ளோம். இதன் விளைவாக இன்று மக்களில் அனேகமானோர் பல்வேறு விதமான நோய்களுக்கு ஆளாகியுள்ளனர்.
இவ்வாறு உருவாகும் நோய்களில் சர்க்கரை வியாதியும் ஒன்றாகும். அதிக இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களோடு, சிறுநீரகத்தின் செயல்பாடும் சம்பந்தப்பட்டதாக இது இருக்கின்றது.

ஏனைய நோய்களைப் போன்று சிறுநீரகத்தில் கல் உண்டாதலும் முக்கியமான ஒரு நோய். ஆகையால் நாம் சிறுநீரகம் பற்றிக் கவனம் செலுத்துவோம்.
சிறுநீரகத்தில் கல் உருவாவதற்குப் பொஸ்பேட், ஒக்சலேட், யூரேட் மற்றும் யூரிக் அமிலம் ஆகிய பதார்த்தங்கள் அல்லது சேர்வைகள் காரணமாக அமைகின்றன. சிறுநீரகத்தில் கல் உருவாக இவை ஒன்று அல்லது பல காரணமாகலாம். பெரும்பாலும் கல்சியம் ஒக்சலேட், கல்சியம் பொஸ்பேட் ஆகியன வெவ்வேறானவையாகும். இவை படிவாகச் சேர்வதால் தான், சிறுநீர்ப் பையில்



(Kidny) கல் உருவாகின்றது.

இச் சிறுநீர் கல் பெரிதாகும் போது சிறுநீர்ப்பையில் இருந்து சிறுநீர் வெளியாவது தடைப்படும்போது வேதனை ஏற்படுகின்றது.

சிறுநீரகக் கல் ஏற்படக் காரணம்?
1. போதிய அளவு நீர் அருந்தாமை.
2. சிறுநீர்ச் செயற்பாட்டில் ஏற்படும் தடங்கல்கள்.
3. சிறுநீரகம் பலவீனமடைந்து செயலிழத்தல்.
4. யூரிக் அமிலம் உயர்வாகக் காணப்படுதல்.
5. கல்சியம் மற்றும் விற்றமின் டீ(D) அதிகமாக உட்கொள்ளல்.

பொதுவாகச் சிறுநீரில் PH, 70 அலகுக்குக் குறைவாகவே காணப்படுகின்றது. இது உயர்வடைந்தால் சிறுநீரகத்தில் தேங்கிக் கல் உருவாக ஏதுவாகின்றது.

அதனால் சிறுநீரகக் கல் உருவாவதைத் தடுக்கும் சில வகையான நீர்த்தன்மை பொருந்திய உணவு வகைகள் உண்டு அவற்றை அதிகம் உட்கொள்வதாலும் தினமும் போதியளவு நீர் அருந்துவதன் மூலமும் சிறுநீரகத்தில் கல் உருவாவதைத் தடுக்க முடியும்.

ஏ.எச்

# விமானங்களில் வைக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பெட்டி




விமானங்களில் உள்ள 'Black Box' என்று நாம் கூறும் பெட்டிகள் உண்மையாகவே கறுப்பு நிறம் கொண்டவையல்ல! கண்களுக்குத் தெரியக் கூடிய வகையில் செம்மஞ்சள் நிறத்தில் தான் அவை அமைந்திருக்கின்றன. பெரும் தீயினில் சிக்குண்டாலும் எரிந்து போகாதவாறும் உவர்நீரில் ஒரு மாதம் வரை ஊறினாலும் ஒரு பாதிப்பும் நேராது. துருப்பிடிக்காத இரும்பினால் செய்யப்பட்டவை இந்தப் பெட்டிகள். சுமார் ஆறு கிலோ மீற்றர் ஆழம் கொண்ட கடலடியில் மூழ்கிப் போனாலும் மூன்று மாதங்களுக்குப் பழுதடையாமலிருக்கும். ஆகாயத்தில் இருந்து அதிகூடிய வேகத்தில் விழுந்தாலும், உடைந்து போகாமலும் செய்யப்பட்டிருக்கும். எங்கு விழுந்தாலும் ஒரு வினாடிக்கு ஒரு தடவை என்னும் கால அளவில், தான் இருக்குமிடத்தை எலக்ரோனிக் தகவல் மூலம் காட்டிக் கொண்டிருக்கும். விமானத்தின் எடை, அது செல்லும் வேகம் போன்றவற்றைக் கணக்கில் கொண்டு, மோதலின் போது கறுப்புப் பெட்டி சிதைவடையாது இருக்க ஒரு அளவு நிர்ணயித்திருக்கிறார்கள். சுமார் ஒரு மாத காலத்திற்கு இந்தத் தகவல்களை அது வெளியிட்டபடியே கிடக்கும்.

கறுப்புப் பெட்டியைக் காணவில்லை என்று கூற முடியாத வகையில் தொழிற்படவல்ல தொழில் நுட்பக் கருவி இது. கறுப்புப் பெட்டியென்பது ஒன்றல்ல. மொத்தம் இரண்டு பெட்டிகள் ஒவ்வொரு விமானத்திலும் இருக்கின்றன. இவை விமானத்தின் சேதம் குறைவான பின் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும். இந்தப் பெட்டிகள் விமானத்தினுள் நடைபெறும் எல்லா விதமான உரையாடல்கள், ஒலிகள், இயந்திர இயக்கங்கள் உட்பட அனைத்தையும் பதிவு செய்து வைத்திருக்கும்.

இந்தக் கறுப்புப் பெட்டிகள் இரண்டிற்கும் தனித்தனியான பெயர்கள் உண்டு. ஒன்று C.V.R என்று அழைக்கப்படும் (Cockpit Voice Recorder). இது விமானமோட்டியின் அறையில் நடைபெறும் உரையாடல்களைப் பதிவு செய்யும். சுமார் இரண்டு மணிநேர உரையாடல்களைப் பதிவு செய்யவல்லது. இரண்டாவது பெட்டியின் குறியீட்டுப் பெயர் F.D.R. இது (Flight Data Recorder) எனப்படும். இது விமானத்தின் தொழில் நுட்பத் தகவல்களைச் சேகரிக்கும் பெட்டியாகும். விமானத்தின் வேகம், பறக்கும் உயரம், திசை உடபடப் பல்வேறு தகவல்களைப் பதிந்து கொண்டிருக்கும். இந்த இருவகைப் பதிவுக்கருவிகளையும் உள்ளடக்கிய கறுப்புப் பெட்டி விமானத்தை வேவுபார்க்க நியமிக்கப்பட்ட ஒற்றன் மாதிரி! விமானிகளின் உரையாடல்கள், விமானத்தின் வேகம், இயந்திரக் கோளாறுகள் என்று இது பதிவு செய்யும் விபரங்களைக் கொண்ட எத்தகைய




கொடூர ஆபத்தை விமானம் எதிர்கொண்டாலும் அதற்குரிய காரணத்தைத் தெளிவாக அறியலாம்.

கறுப்புப் பெட்டிகளில் சில தகவல்கள் சட்டரீதியாகப் பதியப்பட வேண்டியவை உட்பட இதர தகவல்களும் இதில் பதியப்படும். சுமார் 300 விதமான தகவல்களைத் தனது எலக்ரோனிக் சிப்ஸ்கள் மூலம் பதிந்து வைத்துக் கொள்ளும் திறமை வாய்ந்தது. மேலும் பெட்டியின் வெளிப்பகுதியில் நிலவும் நிகழ்வுகளால் பாதிப்படையாதவாறும் இதன் உட்புறம் பாதுகாக்கப்பட்டிருக்கும். விமானத்தில் கேட்கும் பல்வேறுபட்ட ஒலி அதிர்வுகள் உட்பட நுண்ணிய சென்சார்கள் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் யாவும் விமானியின் அறையில் உள்ள கணனியில் சேர்க்கப்படும். அதன் பின்னர் அங்கிருந்து சகலவிதமான தரவுகளும் கறுப்புப் பெட்டிக்கு அனுப்பப்படும்.

கிருஸ்ணசாமி துளசிகரன், தரம் - 09,
யாழ்/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளித் தகவல்கள்

அபிலாஷ்

விண்வெளியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆராய்ச்சிகளுக்குத் தேவையான தகவல்களைத் திரட்டித் தருவதில் செய்மதிகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. விண்வெளியில் மறைந்து காணப்படுகின்ற பல உண்மைகளையும் இந்தச் செய்மதிகளின் உதவியுடன் விஞ்ஞானிகளால் அறிந்துக் கொள்ளமுடிகின்றது.

இன்று விண்வெளி ஆராய்ச்சித்துறை இந்தளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதென்றால் இந்தச் செய்மதிகளின் தகவல் அனுப்பும் பணியே முக்கிய பங்கினை வகித்துள்ளதெனக் கூற முடியும். இதனால் விண்வெளியில் நடைபெறுகின்ற ஒவ்வொரு மாற்றத்தையும் அசைவையும் புவியில் இருந்தவாறு விஞ்ஞானிகள் நேரடியாகக் கண்டு கொள்கின்றனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த செய்மதிகளை விண்வெளிக்கு அனுப்பியதில் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன எனலாம்.

இவ்வாறு இதுவரை விண்வெளிக்கு அனுப்பப்பட்டிருந்த செய்மதிகளைப் பற்றிய சில விபரங்கள் வருமாறு :


## ஸ்புட்னிக்

ஸ்புட்னிக்கானது ரஷ்யாவினால் முதன் முதலாக 1957 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விண்வெளிக்கு அனுப்பப்பட்டதாகும். விண்வெளியில் காணப்படும் அமுக்க வேறுபாடுகளை இதனால் கணிக்க முடிந்தது. இதன் பின்னர் மேலதிகத் தகவல் சேகரிப்பிற்காக 'லைக்கா' என்ற நாயுடன் ஸ்புட்னிக் - 2 விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.



இது அலுமீனியத்தினால் தயாரிக்கப்பட்ட 58 செ.மீ பருமனைக் கொண்டது

## டொபெக்ஸ் செய்மதி



* தகவல்களைத் திரட்டி இந்த அன்ரனாவின் மூலமே பூமிக்குத் தகவல்கள் அனுப்பப்படுகின்றன.

* டொபெக்ஸ் செய்மதி

பூமியிலிருந்து 1320 கி.மீற்றர் தூரத்தில் மேற்புறமாகச் செலுத்தப்பட்டிருக்கும் இந்தச் செய்மதியானது கடலில் நீரோட்ட வேகம், காற்றின் வேகம், நீர் அலை ஆகியன குறித்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. இதன்படி கடல் நீரின் மட்டமானது ஒரே சம அளவில் காணப்படவில்லை என்பதையும் இது உணர்த்தியுள்ளது. குறிப்பாக அத்திலாந்திக் கடலானது அதன் கிழக்குப் புறத்தை விட 70 சென்ரிமீற்றர் அளவில் உயரம் கூடியதாகக் காணப்படுவதாகவும் இந்தச் செய்மதியின் மூலமே கண்டறியப்பட்டுள்ளது.

## கெஸினி - ஹியூஜன்

கெஸினி மற்றும் ஹியூஜனின் நடவடிக்கைகள் 1997 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டன. 2004 ஆம் ஆண்டில் இது சனிக்கோளை அண்மித்தது. கெஸினி, ஹியூஜன் என்ற இரண்டு இணைப்பைக் கொண்ட இந்தச் செய்மதியில் 'கெஸினி' செய்மதியானது அமெரிக்காவின் தயாரிப்பாகும். இது சனிக்கோளினைச் சுற்றி வரப் பயணித்துக் கொண்டிருக்கும். அளவில் சிறிதான 'ஹியூஜன் பகுதியானது 'டைட்டனில்' தரையிறங்கியதால் ஏராளமான தகவல்களைத் திரட்ட முடிந்தது.



"பெரஷூட்"டின் உதவியுடன் டைட்டனில் ஹியூஜன் தரையிறக்கப்படுகின்றது.

கெஸினியானது சனிக்கோளை அண்மிக்கும் போது அங்கு காணப்படும் ஷரொக்கட்டி டின் இரண்டு என்ஜின்களும் தமது வேகத்தைக் குறைத்துக் கொண்டு தேவையான இலக்கை அடைய வழியமைக்கின்றன.

* வியாழக் கோளின் சந்திரனாகக் கருதப்படும் "யுரோப்பா" என்ற சந்திரனையே படத்தில் காண்கிறீர்கள். வொயேஜர் என்ற செய்மதியின் மூலம் எடுக்கப்பட்ட படமே இது.

வட்ட வடிவிலான இந்தத் தட்டின் வழியே (ஏரியல்) படங்கள், தரவுகள் பூமிக்கு அனுப்பப்படுகின்றன.

## வைக்கிங்



"வைக்னிக்" செய்மதியினால் கொண்டு செல்லப்பட்ட உப விண்கலமானது வைக்னிக்கிலிருந்து பிரிபட்டுப் போகும் காட்சியைப் படத்தில் காணலாம்.

பெரஷூட்டின் உதவியுடன் தரை நோக்கிக் கொண்டு செல்லப்படுகின்றது.

பெரஷூட்டிலிருந்து உப விண்கலம் விடுபடுகின்றது.

செவ்வாயில் விண்கலம் இறங்குகின்றது.

அமெரிக்காவும், ரஷ்யாவும் தேவையான சந்தர்ப்பங்களில் செவ்வாயில் தரையிறங்கக் கூடிய செய்மதிகளைத் தயாரித்திருந்தன. வைக்கிங் 1, வைக்கிங் 2 ஆகிய இரண்டு செய்மதிகளும் 1976 ஆம் ஆண்டு செப்டெம்பரில் வெற்றிகரமாகச் செவ்வாயில் தரையிறங்கின. இவற்றினால் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட புகைப்படங்களைப் பிடிக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் மதிப்பு எவ்வாறு பாது

நாம் எமது எழுத்தாவணங்களைப் பேணிப் பாதுகாப்பாக வைக்க வேண்டியதேனெனில் சில சமயங்களில் எதிர்காலத்தில் அவைகளை மறுபதிப்பு அல்லது புதுப்பிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் போது அதற்கு ஏதுவாக இருக்கும் என்பதற்காகும். தற்காலத்தை விட எதிர்காலத்தில் புதுப்பிப்பதற்குப் பல நவீன தொழில்நுட்பக் கருவிகள் கண்டுபிடிக்கப்படலாம்! அவைகளைப் புதுப்பிக்க மறுபதிப்புச் செய்யத் தற்காலத்திலுள்ள ஆவணங்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு பாதுகாக்கப்படல் வேண்டும். புதுப்பிப்பதிலும் பார்க்கப் பாதுகாப்பாக வைப்பது மிகச் சிறந்ததாகும்.



புத்தகங்கள் வாசிக்க அனேகர் விருப்பமுடையவராவர். இதன் காரணமாகவே புத்தகங்களைச் சேகரிப்பதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். அவ்வாறு சேகரிக்கும் போது பற்பல சிக்கல்களும் ஏற்படலாம். அனேக இடையூறுகளுக்கு மத்தியிலும் புத்தகப் பொக்கிஷங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது அவசியமெனில், அதற்கான சில விதிமுறைகளைக் கையாள வேண்டும். அவைகளைச் சரியான முறையில் பின்பற்றாவிடில் நீங்கள் விருப்பமுடன் வைத்திருக்கும் புத்தகங்கள் சீரழியக் கூடும். எனவே, அழிவுகளிலிருந்து அவைகளைப் பாதுகாக்க நாம் வழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும்.

## புத்தகங்களுக்கும் எழுத்தாவணங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் விதம்

1. இரசாயனத் தாக்கத்தினால் பாதிப்பு ஏற்படும் விதம். 2. வெப்பம் 3. ஈரத்தன்மை
4. இரசாயனத் தன்மை 5. ஒளி
6. நச்சு வாயு

## உயிரியல் ரீதியாக ஏற்படக் கூடிய தாக்கங்கள்

1. கிருமிகள் 2. செல்லரித்தல்
3. இற்றுப் போதல்

## பௌதீக ரீதியாக ஏற்படும் தாக்கங்கள்

1. உரிய விதத்தில் புத்தகங்களைப் பாவிக்காமை.
2. உரியமுறையில் அவைகளைப் பாதுகாத்து வைக்காமை.
3. வாரவாரம் சுத்தப்படுத்துவதற்கோ அன்றிப் பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கலாம்.
4. இயற்கையாக ஏற்படும் விபத்துகளிலிருந்தும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கலாம்.

புத்தக ஆவணங்களுக்கு இயற்கையாக ஏற்படும் பாதிப்புச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறுபடலாம் என்பதைத் தரம்பிரித்துக் காட்டலாம். புத்தகங்களுக்குப் பிரதான சில அழிவுகள் உண்டு. அவைகளாவன-

## புத்தகங்களை பூச்சிகள் அரிப்பதிலிருந்து பாதுகாப்பதற்கான பரிகாரம்

1. பூச்சிகள் உள்ள அந்தப் புத்தகத்தை எடுத்துப் பக்கம் பக்கமாகப் பிரித்து மிக நன்றாகச் சுத்தப்படுத்த வேண்டும்.
2. புத்தகத்தின் இரு பக்க அட்டைகளையும் மடக்கிப் பிடித்துக் கொண்டு கீழ்ப்பக்கமாகத் தொங்க விட்டு நன்றாக தட்டிவிட வேண்டும்.

(அதன் முட்டைகள் தாள்களின் மடிப்பிலேதான் தங்கியிருக்கும்.)
3. இவ்வாறு செய்வதன் மூலம் முட்டைகளை அப்புறப்படுத்திவிடலாம். மேலும் இதற்காகத் தயாரிக்கப்பட்ட இரசாயனப் பொருட்கள் விற்பனைக்கு உண்டு. பெரியவர்களின் அனுசரணையுடன் இதைத் தெளிக்கலாம்.

## கறையான்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள்

கறையான் எனப்படும் ஜந்து பூமியிலிருந்து தோன்றும் ஒருவிதக் கிருமியாகும். அவைகளை வெவ்வெறு இனங்களில் காணலாம். இவை சங்கிலித் தொடர் போல் ஊர்ந்து செல்லக் கூடியவை.

## அதற்கான பரிகாரம்

1. கறையான்களினால் அரிக்கப்பட்ட புத்தகங்களை வாசிகசாலையிருந்தோ, வீட்டின் அலுமாரிகளிலிருந்தோ அப்புறப்படுத்திப் பழுதடைந்த பகுதியைத் தட்டிச் சுத்தப்படுத்த வேண்டும்.
2. அறையினுள் உள்ள நாலா பக்க அடிச்சுவரிலும் (பிரீமியம்) அடங்கிய இரசாயனத் திரவங்களைத் தெளிப்பதன் மூலம் மீண்டும் கறையான்கள் ஊர்வதைத் தடுக்கலாம்.
3. இவ்வாறு சுத்தப்படுத்தப்பட்ட ராக்கைகளில் உங்கள் புத்தகங்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளலாம்.

## சிறு வண்டுகளினால் ஏற்படும் பாதிப்புகளுக்கான பரிகாரம்

1. சிறு வண்டுகளினால் அரிக்கப்பட்ட புத்தகங்களை மெல்லிய தூரிகைகளினால் (பிரஸ்) பக்கம் பக்கமாகச் சுத்தப் படுத்திக் கொள்ள வேண்டும். புத்தக மடிப்புகளை நன்றாகச் சுத்தப்படுத்த வேண்டும். இதற்காகக் கடைகளில் விற்பனையாகும் கிருமி நாசினிகளை புத்தக ராக்கைகளினுள்ளும், அலுமாரிகளினுள்ளும் தெளித்தும், அடித்தும் விட வேண்டும்.
2. ஈரத்தன்மை நீங்கிய பின் புத்தகங்களை அடுக்கி 7 நாட்களின் பின் மீண்டும் இம் முறையைக் கையாள வேண்டும்.



### பழுதடைவதன் தாக்கங்கள்

1. நிறம் மாற்றமடைந்து போவது.
2. தூசிகள் ஆவணங்களில் படிந்திருப்பது.
3. பாவனைக்கு உதவாத வகையில் அவைகள் கிழிந்து, சீரழிந்து கிடப்பது.
4. ஜந்துக்களின் மூலமாகப் பழுதடைந்து போவது.
5 இற்றுப் போவது, பழுதடைந்து தொடர்ச்சியாகப் பாதிப்பு ஏற்படுவது அதன் க[illegible]ணமாகப் புத்தக ஆவணங்களில் புள்ளிகள் ஏற்படுவது.
6. சட்டை ஊசியைப் பயன்படுத்தி அட்டை போடுதல், நூல், கம்ரேப், செலோரேப் ஆகியவைகளினால் புத்தகத்தைக் கட்டுவதன் மூலம் புத்தகங்கள் வீணாகிவிடக் கூடும்.

இப்பாதிப்புகளில் ஒன்றோ அல்லது அதற்கு மேலாகவோ அதனைச் சீர்செய்து புதுப்பித்துக் கொள்வது அவசியம். அவ்வாறு செய்யாமல் தொடர்ந்து பாவித்தால் மேலும் புத்தகங்களுக்கு பழுது ஏற்படலாம். எனவே, நமது வாசிகசாலையிலோ அல்லது வீட்டின் புத்தக ராக்கையிலோ பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

## புத்தகங்களைப் பாதுகாத்துக் கொள்வோம்

இரசாயனத் தாக்கங்களினால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்வோம்.
1. வாசிகசாலையினுள் நன்றாகக் காற்று புகும்படி அதன் சுற்றுப் புறங்களை நன்றாகச் சீர்படுத்தி வைக்க வேண்டும்.



டிஷு தாளினால் உறை போடுதல்



பக்கங்களுக்கிடையே "செலோடேப்" ஒட்டுவதால் சேதமடைதல்



"லெமனேட்டிங்" செய்வதால் சேதமடைதல்

2. மின் விளக்குகள் மின் விசிறிகள் பொருத்தப்பட்டிருப்பின் அவைகளை இயங்கவிட்டு உட்புறங்களிலும், வெளிப் புறங்களிலும் உள்ள ஜன்னல்களை நன்றாகத் திறந்து விட்டு, புறக்காற்று வாசிகசாலையிலும் புகும் வண்ணம் ஏற்பாடு செய்து வைக்க வேண்டும்.
3. வாசிகசாலையிலுள்ள ஜன்னல்களுக்குத் திரைச்சீலை போட்டு வைக்க வேண்டியது அவசியம். இதன் மூலம் சூரிய வெப்பத் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப் படலாம். திரைச் சீலைகளினால் காற்றினிலுள்ள குளிர்த்தன்மைகளின் தாக்கம் மட்டுப்படுத்தப்படும்.
4. குளிரூட்டி பொருத்தப்பட்டிருப்பின் 24 மணிநேரம் இயங்க வைப்பது அவசியம். அதனால் உஷ்ணத் தன்மையின் தாக்கம் குறைவடையும். எனினும் குளிரூட்டியை அடிக்கடி இடைநிறுத்தி இயக்கினால் வாசிகசாலையினுள் குளிர்த்தன்மை அதிகரித்துக் கொண்டு போகலாம்.
5. குளிரூட்டிச் சாதனம் பொருத்தப்பட்டிருந்தால் வாசிகசாலையினுள் உஷ்ணத்தை உண்டாக்கும் யந்திரமும் பொருத்தப்படல் வேண்டும். இதன்மூலம் உள்ளே ஏற்படும் குளிர்த்தன்மை ஆவியாக மாறி வெளியேறிவிடும்.
6. உஷ்ணமான சூரியஒளி நேரடியாகப் புத்தக ராக்கையினுள் படியாத வகையில் ஏற்பாடு செய்தல் அவசியம். சூரியக்கதிரில் உஷ்ணத்தின் தாக்கத்தினால் புத்தகங்கள் நிறமாற்றமடைவதைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக்க ஆவணங்களை காத்துக் கொள்வது?

தவிர்த்துக் கொள்ளலாம். ஒளி நேரடியாகப் படர விடாது வைக்க வேண்டும்.

## வண்டுகளிலிருந்து புத்தகங்களுக்கு ஏற்படும் பாதிப்பு

புத்தகங்களை அரிக்கும் வண்டு இனத்தை எல்லா நாடுகளிலும் காணக் கூடியதாக இருக்கும். புத்தகத்திற்குப் பெரும் தீங்கு விளைவிக்கும் இந்த ஜந்துக்களை இலகுவில் அழித்து விட முடியாது. எல்லா வாசிகசாலைகளிலும் இவைகளைக் காணக்கூடியதாக இருக்கும். புத்தக முதற் பக்கத்தில் அரிக்கத் தொடங்கி கடைசிப் பக்கம் வரை ஊடுருவிச் சென்று பெரும் பாதிப்பை உண்டு பண்ணுவதே இவைகளின் செயலாகும்.



## புத்தகங்களுக்கான இராக்கைகள்

இராக்கைகளோ அன்றி அலுமாரிகளோ மிகவும் உறுதியானதான பலகைகளினால் செய்யப்பட்டிருக்க வேண்டும். பாதுகாப்பிற்காக வர்ணம் பூசப்பட்டிருக்க வேண்டும். உலோகத்திலான இராக்கைகளாயின் துருப் பிடிக்காத வர்ணம் (பெயின்ட்) பூசுதல் வேண்டும். (இது புத்தகங்களுக்குப் பாதிப்பு ஏற்படாதிருக்கவேயாகும்.) விற்பனைக்குள்ள ஒக்சைட் பூசப்பட்டுள்ள தகடுகள் துருப்பிடிக்காத் தன்மையுடையவை. எனவே இவை புத்தக ராக்கைகள் செய்ய உசிதமானதாகும்.

## இராக்கைகளில் புத்தகங்களை அடுக்கி வைத்தல்

புத்தகங்கள் எல்லாவற்றையும் நெருக்கமாக அடுக்காது இடைவெளி விட்டு வைக்க வேண்டும். அத்தோடு புத்தகங்களை நிறுத்தி அடுக்கிவைக்க வேண்டும். வண்ணப் படங்கள் அடங்கிய புத்தகங்களாயின் பக்கங்களுக்கு நடுவே காற்றுப் புகும் வண்ணம் வைக்க வேண்டும். நீண்ட நாட்களுக்கு இறுக்கமாக வைத்திருந்தால் வண்ணப்படங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்ளும் வாய்ப்புண்டு.



பொலித்தீன் உறை கொண்டு பாதுகாக்கலாம்



கடதாசியை காய்ச்சி ஊற்றி காக்கும் முறை

## புத்தகங்களைப் புதுப்பித்தல்

1. முதற் பிரதியைப் புதுப்பிக்கும்போது அதன் தன்மையை ஒருபோதும் மாற்றம் செய்யக்கூடாது. மிகவும் கவனமாக வரிசைக்கிரமமாக முடிக்க வேண்டும்.
2. புதுப்பிக்கும் போது அதன் தன்மையும் அளவும் கூடியவரை தெளிவாக அமைய வேண்டும்.
3. ஆவணங்களைப் புதுப்பிக்கும் போது உபகரணங்களை, மூலப்பொருட்களை மறுமுறை திறக்கும்போது சுலபமாக அகற்றுவதற்கு ஏதுவாக அமைய வேண்டும்.
4. பாவிக்கப்படும் அனைத்துப் பொருட்களும் நீண்ட நாட்களுக்குத் தாக்குபிடிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
5. புதுப்பிக்கப்டும் போது அதன் எழுத்துக்கள் வசனங்கள் அனைத்தும் எக்காரணங்கள் கொண்டும் மாற்றமடையக்கூடாது.
6. அதற்குப் புத்தகம் புதுப்பிப்பவர்களை அணுகி அவர்களின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வது அவசியம். அவ்வாறானவர்களை மீண்டும் பலமுள்ளதாக ஆக்குவதற்கு இற்றுப்போயுள்ள பகுதிகளைப் பலப்படுத்த வேண்டும். இதற்குக் கையாள வேண்டிய விதிமுறைகள்:-

1. பாரம்பரியத் தொழில் முறைமை (Traditional Method)
2. மெல்லிய பொலித்தீன் காப்பிடல் (
3. தடித்த பொலித்தீன் காப்பிடல் (Solvent Laminiating)

## பாரம்பரிய முறை

புராணப் புத்தகாவணங்களைப் புதுப்பிப்பதற்கு இயலாது போவதன் காரணம், அவை பதிப்புச் செய்யப்பட்டுள்ள கடதாசி, அதற்கு பயன்படுத்தியுள்ள 'மை' ஆகியவற்றின் தன்மை தரமற்றதாக இருத்தலேயாகும். அதற்குப் பாவிக்கப்பட்டுள்ள 'மை' இரசாயன் ரீதியாகத் தாக்கத்தை ஏற்படுத்தும். அமிலத்தன்மையற்ற கடதாசிகளைப் பாவித்துக் குறைந்த செலவில் தயாரிக்கும் போதும் அவ்வாவணங்கள் பழுதடைந்து புதுப்பிக்க முடியாது போகின்றன.

அவ்வாறான ஆவணங்களை நீண்ட நாட்கள் பாவிக்க வேண்டுமாயின் புத்தக அட்டையிலுள்ள பின்புறத்தில் மெல்லிய ரிசு கடதாசி ஒட்டிவிட வேண்டும். அவ்வாறு ஒட்டினால் புத்தகத்தின் 3% அல்லது 3% வெளியில் தெரியுமளவில் இருக்கும். இதற்கென விஷேசமாகத் தயாரிக்கப்பட்டுள்ள பசையைப் பாவிப்பார்கள். இந்த முறை ஸ்திரத் தன்மையற்றபடியால் மறுபடியும் அவற்றைப் புதுப்பிக்கலாம். லெமினேற்றிங் முறையைவிட இவ்வாறு திருத்தும் முறைகள் உலகில் எல்லாப் பதிப்பகங்களிலும் கையாளப்படுகின்றன.

## கடதாசியைக் காய்ச்சி ஊற்றும் முறை

புதுப்பிப்பதற்குப் புத்தகங்களை ஒரு சமமான இடத்தில் வைத்துவிட வேண்டும். கடதாசியை நன்றாகத் தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். பிறகு இந்தக் கடதாசிகளை ஒரு பாத்திரத்தில் இட்டுக் குறிப்பிட்ட புத்தகத்தின் சேதமடைந்த பகுதிகளில் விட்டு நிரப்பிவிட முடியும். இந்த வழிமுறை தற்போது ஐரோப்பிய நாடுகளில் தேசிய புத்தக ஆவண இலாகாக்களிலும் பின்பற்றப்படுகின்றது.

## லெமினேற்றிங் செய்தல்

லெமினேற்றிங் செய்யப்பட்ட ஆவணங்களைத் திருப்பிக் கழற்றிவிட முடியாது. இந்த முறையில் செய்யப்படும் புத்தக ஆவணங்களை நீண்ட நாட்கள் பாதுகாப்பாக வைத்திருக்க முடியாது. அந்த ஆவணங்களைப் புதுப்பிக்கும் தன்மையைப் பொறுத்தே அதைப் பாவிக்கும் தன்மை நீடிக்கும்.

## புத்தகத்தின் தாள்கள் மடிப்பிற்குப் பாதுகாப்பான அட்டை போடுதல்

பொலித்தீன் சீற்களை நீங்கள் பல வர்ணங்களிலும் வெள்ளை நிறத்திலும் வாங்கலாம். நாம் பாதுகாக்க வேண்டிய ஆவணத்திலும் பார்க்க அளவில் சிறிது கூடுதலாக நீளத்தாலும் இரு துண்டுகள் அகலத்தாலும் வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதைக் கடித உறைகளைப் போல் மூன்று பகுதிகளையும் ஒட்டிவிட வேண்டும். இதன் உள்ளே பத்திரத்தை வைத்து விளிம்புகளைச் சீல் வைத்தோ (கம்ரேப்) செலோரேப் என்பவற்றைப் பாவித்து மூடிவிடலாம்.

இவ்வாறு பாதுகாப்பது வர்ணப்படங்களினால் ஈரத்தன்மையை ஈர்த்தெடுக்கும் கடதாசியைப் படம் இல்லாத பக்கம் வைத்து விடுவது நன்று. லெமினேற்றிங் முறையில் செய்யப்படும் பாதுகாப்புக் கவர்களினால் உள்ளே இருக்கும் ஆவணங்களுக்கு எந்த விதப் பாதிப்பும் ஏற்படாது.




புத்தகத்தில் ஏற்படும் பூஞ்சணம்



பூச்சிகளால் அரிக்கப்பட்ட ஓர் ஆவணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்? எப்படி?

** கர்ப்பிணிப் பெண்களுக்குக் கல்சியம் மற்றும் இரும்புச் சத்துக்கள் கொண்ட மாத்திரை வகைகள் கொடுக்கப்படுவது ஏன்?



கர்ப்பிணிப் பெண்ணின் கர்ப்பப் பையில் காணப்படும் கருவானது உரிய வகையில் வளர்ச்சி காண்பதற்கு ஊட்டச் சத்துக்கள் அவசியமாகும். மேலும் குறிப்பாகக் கருவிலுள்ள சிசுவின் முரசு பலம் பெற்று வளர்ச்சி காண்பதற்குக் 'கல்சியம்' சத்து அவசியமாகும். இவ்வாறு தேவைப்படுகின்ற கல்சியம் சத்தானது தாயின் உடம்பிலுள்ள கல்சியத்தை உறிஞ்சியெடுத்தே ஈடு செய்யப்படுகின்றது. இத்தகைய சந்தர்ப்பத்தில் கர்ப்பிணித் தாய்க்குக் கல்சியம் குறைபாடு ஏற்பட்டுத் தாயின் பற்களுக்கும், முரசுக்கும் அது பாதிப்பை ஏற்படுத்திவிடக்கூடும். எனவே தான் அதற்குத் தேவையான அளவில் கல்சியம் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

மேலும் கர்ப்பிணித் தாயின் கருவின் வளர்ச்சிக்குத் தேவையான ஒக்சிசனானது தாயின் குருதியிலிருந்து கருவின் குருதிக்குக் கடத்தப் படுவதற்குக் குருதிக் கலங்களில் செங்குருதித் துணிக்கைகள் இருப்பது அவசியமாகும். செங்குருதித் துணிக்கைகளில் இரும்புச் சத்துக் குறைவாகக் காணப்பட்டால் குருதியில் "ஹிமோகுளோபின்" உருவாதல் குறைவடையும். இத்தகைய சந்தர்ப்பங்களில் தாயின் குருதியிலிருந்தே கருவானது தேவையான இரும்புச் சத்தினைப் பெறுகின்றது. இதனால் தாயின் உடம்பிற்கு மேலதிகமாக இரும்புச்சத்துத் தேவைப்படும். இதன் காரணமாகவே கர்ப்பிணிப் பெண்களுக்கு இரும்புச் சத்துள்ள மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

** குளிர்சாதனப் பெட்டியின் கதவு சரியாகப் பூட்டப்படாதிருப்பின் அதிலுள்ள மரக்கறிகள் கெட்டுப்போகும் நிலையை அடைவது ஏன்?



சுற்றுப் புறச் சூழலிலுள்ள வெப்பத்தில் பலவிதமான கிருமிகள் காணப்படுகின்றன. இத்தகைய கிருமிகளின் தாக்கத்தினால் தான் மரக்கறி, பழ வகைகள் கெட்டுப் போகின்றன. எனவே குளிர் சாதனப் பெட்டியில் இவற்றை வைக்கும் போது இந்த வெப்பத்திலுள்ள கிருமிகளின் ஊடுருவல் தடுக்கப்படுகின்றது. எனினும், குளிர்சாதனப் பெட்டியின் கதவு சரியாக மூடப்படாதிருந்தால் அந்த இடைவெளியின் வழியாக வெப்பமும் உட்செல்கின்றது. இதன் வழியே கிருமிகளும் இலகுவாக அங்கு கடத்தப்பட்டு, அதிலுள்ள மரக்கறி வகைகளைப் பாதித்து அவற்றைக் கெடச் செய்கின்றன.



# அறிவியற் கலசம்

பருக்கை : 31

அரு.வை. நாகராஜன்

# ஆழ் சமுத்திர நிலைகள்

அன்புச் செல்வங்களே!
இது எமது பருக்கையின் 31வது பருக்கை. ஆழ் சமுத்திரத்தின் நிலைகள் பற்றி இங்கு சுருக்கமாகத் தெரிந்து கொண்டு அதற்கு அறிவியற் கண்டு பிடிப்புகள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதையும் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம். வாசியுங்கள். வாசித்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்
நன்றி.

ஆழ் சமுத்திரத்தில் சூரியவொளி 500 அடி ஆழம் வரையே ஊடறுத்துச் செல்லும். இப்பகுதியை ஈப்போடிக் வலயம் (Ihotic Zone) என்பர். அதே போல், 3000 அடி ஆழத்தில் உதய ஞாயிற்றொளி வலயம் (Twilght Zone) உள்ளது. இது சமுத்திரத்தின் அடி ஆழத்திற் காணப்படும். இதன் கீழ் பாத்தி பெலாஜிக் வலயத்தில் (Bathypelagi Zone) எந்த வித ஒளியுமற்ற இருள் சூழ்ந்த மண்டலமே காணப்படும். இதற்குக் கீழ் சூரியவொளி உட்புகாது.

சமுத்திர வெப்ப நிலை கீழே செல்லச் செல்லக் குறைந்து கொண்டே போகும். கடல் நீர் மட்டத்தின் வெப்பம், பெரும்பாலும் அங்குள்ள காலநிலைக்கேற்பவே அமையும். இது பருவகாலநிலை, பிரதேச நிலை என்பனவற்றை ஒட்டிக் கூடியும் குறைந்தும் இருக்கும். அத்தோடு, புவியின் மேற்றள வெப்ப நிலையால் நீராவி ஆகியும், நன்னீராலும் (மழை-நதி) கூடியும் குறைந்தும் காணப் பெறும். ஆனால், ஆழ் சமுத்திர நிலைகளில் 6500 அடி ஆழத்தின் கீழ் வெப்ப நிலை எப்பொழுதும் 37°F. பெரன்கைற்றுக்கும் கீழேயே இருக்கும். இதற்குக் காரணமாக இருப்பது-ஆழ் கடலின் சுழி ஓட்டமேயாம்.

சமுத்திர நீர் எப்பொழுதும் அசைந்து, இயங்கிக் கொண்டே இருக்கும். அதன் மேற்றளத்தில் அலைகள் நெடுந் தொலைவுக்கு அடித்துச் செல்லவும் செய்யும். அதன் மேற்றள அலைகள் சூரியவொளி சமுத்திர ஈர்ப்புக் குள்ளாகி வற்றுப் பெருக்கைத் (Tides) தினமும் உள்வாங்கிக் கொண்டிருக்கும். இவற்றுக்கு மேலதிகமாக நீர் அடி மட்டத்தில் நீர்ச்சுழிகளும் பெருமளவு நீரைப் புவியின் நாலா புறமும் மாற்றி மாற்றி இழுத்துச் செல்லும். மேலுங் கீழும் உந்தப்படும் நீரலைகள் கரைகளை நோக்கித் தள்ளும். காற்று நீரலைகளைக் கடலூடாகச் செல்லவும் உதவும். இதன் முக்கிய செயற்பாடு, நீரைச் சிறு சிறு பகுதிகளாக்கி, மேலுங் கீழும் சுருட்டி, வட்ட வடிவில் உருளச் செய்வதாகும்.

மேல்மட்டத்து நீரலைகள் புவியின் மேற்பரப்பை மாற்றவல்லதாக அமையும். அவை பெருங்கடற் கரையோரங்களைச் (Sea-beach) செங்குத்தான பாறை முகப்புப் (Cliffs) போன்றவற்றை மிகவும் சரிவாக உருவாக்கும். மேலும், இச்சமுத்திர நீரலைகள் கரைகளில் உள்ள மணற் குவியல்களையும், சமுத்தரங்களின் பல பாகங்களிலும் இழுத்துச் சென்று ஆங்காங்கே அவற்றைப் படியவுஞ் செய்யும். எடுத்துக் காட்டுக்கு இங்கிலாந்தின் மாஸ்டம் பே (Masdam Bay) எனும் குடாவில் உள்ள செங்குத்தான பாறைகள் கடலலைகளின் ஆரம்பக் குள்ளாகி உருவாகியதைக் குறிப்பிடலாம்.

## கடலின் வற்றுப் பெருக்குகள் (Tides)

சந்திர ஈர்ப்புக் காரணமாகச் சமுத்திர நீரைச் சந்திரன் நேரடியாக முகங் கொடுக்கும் போது கடல் நீரில் வற்றுப் பெருக்கு ஏற்படுகி றது. புவி தன்னச்சில், புவியை மையப்பாட்டில் இருந்து, சுழலும் போது நீர் முன் தள்ளி எதிர்த் திசையில் உப்பி (Bulge) உந்தப் படும். சூரியனின் ஈர்ப்பும் இவ்வேளையில் சமுத்திரத்தைத் தாக்கும். இதன் காரணமாக முன் தள்ளப்படும் நீர் புவியின் மையத்தைச் சுற்றி அசைந்து இயங்கும். அப்பொழுது, வற்றுப் பெருக்கு உருவாகிக் கடலின் நீர் மட்டத்தில் உயர்வையும் தாழ்வையும் உருவாக்கும். ஒரு மாறுபாடான வற்றுப் பெருக்கு நீரலையை உண்டாக்கி ஒரு சில மணி நேரத்துள், பல மைல் தூரத்துக்கும் அது பயணிக்கும். இவ்வலைகள் கடற்கரையை அடையும் போது அவ்வலைகள் பல அடி உயரத்துக்கு உயர்ந்து நிற்கும்.

இளவேனிற் காலத்தில் வற்றுப் பெருக்குகள் சூரியன்-சந்திரன்-புவி ஆகிய மூன்றும் ஒரு நேர்கோட்டில் வரும்போது, நேரற்ற வற்றுப் பெருக்குகள் (Tidal-Waves) நேர் கோணத்தில் அமையும். மேலும் முன் கூறிய கடலலைகள் அதிவுயரக் கிளம்பி, கரைகளை நோக்கி உந்தித் தள்ளும். (அண்மையில்-ஏற்பட்ட 'சுனாமி'ப் பேராழிப் பேரலை போல்) அவை அவ்வாறு பயணிக்கும் போது பெரும் வெள்ளப் பெருக்குகளையும், பேரழிவுகளையும் கரையோரப் பகுதிகளிலும், உள்நாட்டிலும் உண்டு பண்ணும். மேலும், புவிச் சுழற்சி விசையும் கடல் மட்டத்திற் சுழலும் கடற்சுழிகள் (Sea-Currents) காற்றின் வீச்சால் பெரும்பாலும் ஓரிடத்தில் இருந்து பிறிதோர் இடத்துக்குப் பயணிக்கும். புவியின் வட கோளார்த்தத்தில் இக்காற்றின் வீச்சு வலப்புற மாகவும், தென்னரைக் கோளார்த்தத்தில் இடப்புறமாகவும் சுழியோடும். இதனால் நில அமைவுகள் பெரு மாற்றங்களுக்கு உள்ளாகும்.

## சமுத்திர வெப்பமும் அதன் அடர்த்தியும்

புவி மத்திய கோட்டுப் பிரதேசத்தில் (Equatorial Region) வெப்ப நீர், குளிர் நீரிலும் அடர்த்தி குறைவுடையதாக இருக்கும். துருவப் பகுதிகளிலும் வெப்ப வலயத்தில் சூரிய வெப்பம் நீரை வெப்பமாக்கிக் கொள்ளும். ஆதலால், சமுத்திர நீரின் உவர்த் தன்மை கொண்டதாகக் கூடிய அடர்த்தி உடைய



தாக்கும். மத்திய தரைக்கடற் பிரதேசத்து (Mediterranean Sea) கடல் நீரைக் கூடிய உவர்த் தன்மை கொண்டதாக்கிக் கூடிய அடர்த்தி கொண்ட உப்புத் தன்மையாக விளங்கும். கடற் சுழியோட்டம் இவ்வுவர்த் தன்மையைக் கூடிய அல்லது குறைந்ததாகக் கொண்டிருக்கும். இந்த வகையில், அத்திலாந்திக் சமுத்திரமும், கருங் கடலும் இங்குள்ள நீரைச் சமப்படுத்திக் கொண்டிருக்கிறது.

முன்னாளில், கடலின் ஆழத்தைக் காண நீண்ட இழை கொண்ட கயிறுகளைக் கடலுக்குள் விட்டு அளந்து பார்த்தார்கள். அது மிகவும் சிரமமாகவும் சரியாக இல்லாமலும் இருந்தது. அதனால், கடற் பயணத்தில் கடலுக்கடியில் உள்ள கற்பாறைகள், மணற் றிட்டுகள் மற்றும் கடற் பயணத் தடைகள் போன்றவற்றைச் சரியாகத் தெரியாமல் இருந்தார்கள். ஆனால், இன்றைய நவீன அறிவியல் தேடல்களால் புதிய புதிய கருவிகள் கண்டு பிடிக்கப் பெற்றுக் கடலியலில் புதுமை காணப்பெறுகிறது.

இக்கருவிகள் கடலுக்கடியில் இயங்கி, கடலின் ஆழ-அகல-நீளத்தையும் அதனுள் அடங்கும் பொருள்களையும் உயிர் வாழ்வனவற்றையும் துல்லியமாகக் கண்டறியவும் அவற்றைப் பெறவும் உதவுகின்றன.

குறிப்பாக நீராழத்தில் இயங்கும் நீர்மூழ்கிச் சாதனங்களே முக்கியமாக இருக்கின்றன. அவை பெரும்பாலும், மின்வலு கொண்டும் நவீன ஆய்வின் புதுமையான கண்டு பிடிப்புகளின் பயனாகவும் இருக்கின்றன. அவை கடல் வர்த்தகத்தினதும் கடற் சூழலியல் அறிஞர்களினதும் செயற்பாட்டில் நிகழ்கின்றன. அங்கு தொலைநோக்கி நிழற்படக் கருவிகள் (Telivision Cameras) போன்றவை உடனுக்குடன் படம் பிடித்து நீரின் மேற்றள நிலையங்களுக்குப் பரிவர்த்தனை செய்யவும் செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்குப் பொருத்தமான நாடகம்

நாடகம் எழுதப்படுவதன் பிரதான நோக்கம் அதை நடிப்பதே. ஒரு நாடகம் நடிக்கப்படும் பொழுது தான் அதன் முழு அழகும் வெளிப் படுகின்றது. அப்பொழுது தான் மக்களும் அதிலிருந்து உச்சப் பயன்பாட்டைப் பெறுவர்.



அதனால் நடிக்கப்படுவதெல்லாம் நல்ல நாடகம் என்று எண்ணிவிடக் கூடாது. வெறும் கேலிக் கூத்துக்களும் நடிக்கப்படுகின்றன. நல்ல கதையும் கருத்தும் குண சித்திரங்களும் கொண்ட நாடகங்களே சிறந்த நாடகங் களாகும்.

நடிப்பதற்கு எழுதப்படும் நாடகம் படிப்பதற்கும் ஏற்றதானால் அதுவும் நல்ல நாடகமே! மேற்குலகத்தினர் நீண்ட காலமாக நாடகங் கள் ஆடி வந்திருக்கின்றனர். அந்த நாட கங்களிற் பல எமக்குக் கிடைக்கின்றன. உலகின் தலை சிறந்த நாடகங்களையெல் லாம் ஆங்கில மொழியில் மொழி பெயர்த்து வைத்திருக்கின்றனர். அந்த நாடகங்களை [illegible]சித்தால், நாடகத்தின் பரிணாம வளர்ச்சி யை நாங்கள் அறிந்து கொள்ளலாம்.

தமிழ் மக்களும் மிக நீண்ட காலமாக நாடகங்கள் ஆடித்தான் வந்திருக்கின்றனர். ஆனால் நம் முன்னோர் ஆடிய நாடக நூல் கள் ஒன்றும் எமக்குக் கிடைக்கவில்லை. எமக்குக் கிடைக்கின்ற மிகப் பழைய தமிழ் நாடகங்கள், 'தெருக் கூத்துக்கள்' என்று அழைக்கப்பட்ட இசை நாடகங்களும், நாட் டுக் கூத்துக்களுமே. இவற்றிலும் பலவற் றிற்கு எழுத்துருக்கள் கிடையாது.

நாட்டுக் கூத்துக்கள் நூற்றுக் கணக்கான வை. அவற்றை 'அண்ணாவிமார்' என்று அழைக்கப்பட்டவர்களே பழக்கினர். அந்தப் பரம்பரை அழிந்துவிட்டது. அவர்கள் ஆடுவ தைப் பார்த்துப் பழகியவர்களே இப்பொழு தும் ஆடுகின்றனர். அதுவும் எப்பொழுதாவது தான்!

எமது சமகால வாழ்க்கையைச் சித்தரிக் கின்ற நவீன நாடகங்களே மாணவர்களுக் கும் பொருத்தமான நாடகங்களாகும். [illegible]கத்தில் நாம் சந்தித்துப் பேசிப் பழகு கின்ற மனிதர்களே அவற்றில் பாத்திரங் களாக வருவர். சமூகத்தின் பிரச்சினைகளே அவற்றில் அலசப்படும். மாணவர்கள் அப்பாத் திரங்களுடன் ஒன்றி நின்று நாடகத்தை நன்கு இரசிப்பர்.

நாடகம் எந்த இடத்தைக் களமாகக் கொண்டு, எழுதப்படுகின்றதோ, அந்த இடத்தின் பேச்சு வழக்கு மொழியிலேயே நாடகம் எழுதப்பட வேண்டும். பார்வையாளரும் நாடகத்தில் சொல் லப்படுபவை எல்லாவற்றையும் நன்றாக விளங்கிக் கொள்வர். நாடகமும் வேகமாக ஓடும்.

இலங்கையில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை தான் அந்த வகை நாடகங்களை முதல் முதலாக எழுதி நடிப்பித்தும் காட்டினார். அவரது மாணவனாகிய நான் எழுதிய 400 நாடகங்களும் நவீன நாடகங்களே!

பேராசிரியர் 55 ஆண்டுகளுக்கு முன்பு எழுதி யும், நடித்தும் காட்டிய அந்த நவீன நாட கங்ளின் சிறப்பை, இலங்கைத் தமிழர்கள் இன்னும் புரிந்து கொண்டதாகத் தெரிய வில்லை!

கலாபூஷணம் அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளை.

# "புலவர்மணி" தொடாத துறையே இல்லை

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளைக்கெனத் தனிச் சிறப்பிடம் உண்டு. தமிழ் இலக்கியத் தில் இவர் பதித்த ஆழமான காலடிச் சுவடு களைக் காலத்தால் கூட அழித்துவிட முடி யாது. எனவே, இவர் படைப்புக்கள் காலத் தை வென்று நிற்கும் என்பது வெளிப்படை.




புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளையின் 'புல வர் மணி கவிதைகள்' என்ற இந்நூலை, முதலில் 1980 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணி மன்றத்தினர் வெளியிட்டிருந்தனர். அதனை இப்போது மீண்டும் சென்னை மணிமேகலைப் பிரசுரத்தினர் மீள்பதிப்புச் செய்துள்ளனர். ரவி தமிழ்வாணன் இந்நூலுக் கான தனது பதிப்புரையில் பின்வருமாறு கூறுகிறார்:-

"தன் தந்தையின் படைப்புக்களை மறு பதிப்பு செய்ய வேண்டும் என்று அப்போது கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்த புலவர் மணியின் புதல்வர் பெ.விஜய ரத்தினம் அவர்கள் கேட்டபோது மனம் மகிழ்ந்து நான் சம்மதித்ததற்குக் காரணம் அமரர் புலவர் மணியவர்களின் அற்புதமான தமிழ்ப் படைப்புக்கள் தான். இலங்கை அரசு இத் தமிழறிஞருக்காகத் தபால் தலை வெளியிட்டிருப்பது இவரது சிறப்புக்கு மிகப் பெரிய அங்கீகாரம்."

இந்நூலில் இலங்கை மணித்திருநாடு என்ற கவிதையில் நாட்டுப் பற்றையும், வரலாற்றை யும், இலங்கையின் இயற்கை வளத்தையும் அழகுற விபரித்திருக்கும் பாங்கு மிகவும் அற்புதம். கிட்டத்தட்ட 90 கவிதைகளில் இவர் தொடாத துறையே இல்லை எனலாம். இந்நூலின் இந்திய விலை ரூ.40/=.




# தமிழ் மொழியில் சிங்களப் பழமொழிகள்

பழமொழிகள் என்பன நாட்டார் இலக்கியத் தின் மூலவேர் போன்றன. தமிழ் மொழியில் ஆயிரக்கணக்கான பழமொழிகள் இருக்கின் றன. அதைவிட ஆங்கிலப் பழமொழிகள் பல தமிழில் வெளிவந்திருக்கின்றன. இந்திய மொழிகள் பலவற்றிலுமுள்ள பழமொழிகள் தமிழ் புத்தகங்களாக வெளிவந்திருக்கின் றன. ஆனால் சிங்களப் பழமொழிகள் தமி ழில் வரவில்லை என்ற குறை பல நாட்க ளாக நிலவி வந்தது. அந்தக் குறையை நீக்குவது போல் சிங்களப் பழமொழிகள் என்னும் நூல் இப்பொழுது வெளிவந்திருக் கிறது.

எழுத்தாளரும், ஒலிபரப்பாளருமான தம்பிஜ யா தேவதாஸ் இந்நூலை எழுதி வெளியிட் டுள்ளார். 136 பக்கங்களைக் கொண்ட இந்நூ லில் 800க்கும் மேற்பட்ட பழமொழிகள் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு பழமொழிகளுக் குமான உட்கருத்தும் கொடுக்கப்பட்டிருக் கிறது.

கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் கலாநிதி செ.யோகராசா அணிந் துரை வழங்கியிருக்கிறார். தற்போதைய காலகட்டத்தில் ஆசிரியரின் முயற்சி போற்று தற்குரியது என்று குறிப்பிட்டுள்ளார். பல பழமொழிகளை எடுத்துக்காட்டுகிறார். இலங் கையின் பழம் பெருமைகளை எடுத்தக் காட் டும் வகையில் அட்டைப்படம் நான்கு வர்ண ங்களில் அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்ப் பழமொழிகள் ஏற்கனவே சிங்கள மொழியில் வெளியிடப்பட்டுள்ளன. பேராசி ரியர் சுனில் ஆரியரத்ன 1000 தமிழ்ப் பழமொ ழிகளைச் சிங்களத்தில் [illegible]




புத்தகமாக வெளியிட்டார். இப்பொழுது தம்பி ஜயா தேவதாஸ் 815 சிங்களப் பழமொழி களைத் தமிழில் மொழி பெயர்த்துப் புத்தக மாக வெளியிட்டிருக்கிறார்.

தம்பிஜயா தேவதாஸ் ஏற்கனவே பல சிங்களக் கதைகளை மொழி பெயர்த்தவர். பிரபலமான மூன்று நாவல்களைத் தமிழில் தந்து புத்தகமாக வெளியிட்டவர். 'பொன் விழாக்கண்ட சிங்களச் சினிமா' என்ற இவர் நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது.

தேசிய நூலக ஆவணமாக்கல் பிரிவின் அனுசரணையுடன் கொழும்பு வித்தியாதீபம் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு, வித்தியா தீபம் பதிப்பகம், 90/9 புதிய செட்டித்தெரு, கொழும்பு-13, தொலைபேசி:2448743 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

**அழிக்க வந்த சுனாமியும்....**


திருத்தம் : சென்ற இதழில் மேற்படி நூல் பற்றிய அறிமுகத்தில் முகவரியை பின்வருமாறு திருத்திக் கொள்ளவும்.

எம்.எம்.எம்.இஸ்மாயில்,
454, எம்.எச்.எம்.அஸ்ரப் வீதி,
ஏறாவூர்.
தொ.பே: 2240994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரஷ்யா – 02



சென்ற இதழ்த் தொடர்ச்சி

## மொழியும், மதமும்

நாட்டின் அரச கரும மொழியாக ரஷ்ய மொழி உள்ளது. சகல அரசின் செயற்பாடுகளும் ரஷ்ய மொழியிலேயே நடைபெறுகின்றன. இதனைவிட வேறு 100 மொழிகள் பாவனையில் உள்ளன. இதனால் இங்கு வாழ்பவர்கள் பிரதான மொழியை விட மேலதிகமாகப் பல மொழிகளைப் பேசக்கூடியவர்களாக உள்ளனர். செல்டிக், அல்டிக், கோக்கேஸியன், கிறிகோ, உக்ரேன் மற்றும் உருஸிக் போன்ற மொழிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக ரஷ்யா இருந்தபோது சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரம் காணப்படவில்லை. ஆனால், 1990 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்பட்ட சமூகப் புரட்சியின் பின்பு இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டது. பலர் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுபவர்களாக உள்ளனர். ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றும் நாடாகவே இது இருந்தது. இதற்கு அடுத்ததாக இஸ்லாம் மதம் காணப்படுகின்றது. இஸ்லாமியர் வொல்கா பகுதியிலேயே அதிகமாக வாழ்கின்றனர். இவர்களைவிட யூதர்கள், புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர் மற்றும் பௌத்தர்களும் ரஷ்யாவில் உள்ளனர்.

## கல்வி

சோவியத் ஒன்றியத்தில் ஆரம்பக் காலத்திலிருந்தே கல்வியானது உயர் தரத்திலேயே காணப்பட்டது. பண்டைக் காலமுதலே கல்வியில் முன்னணியில் இருந்தமையால் ரஷ்யா பலரின் கவனத்தையும் ஈர்த்தது. 1992 ஆம் ஆண்டு தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டது. இதன் பின் கல்வியைப் பெற அதிக செலவு செய்ய வேண்டி ஏற்பட்டது. 6 வயதிலிருந்து கல்வியைப் பெற வேண்டுமெனக் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. அதுவும் இலவசமாகவே வழங்கப்படுகின்றது.

## வாழ்க்கை முறை

ரஷ்யாவின் வாழ்க்கை முறையானது அவர்கள் பெறும் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டது. எளிமையான வாழ்க்கையை விரும்பும் ரஷ்யர்கள் வாரக் கடைசியில் உல்லாசப் பிரயாணங்களை மேற்கொள்வார்கள். இசை, சினிமா, இலக்கியம் போன்றவற்றை இவர்கள் விரும்புகின்றனர்.

## கலை

ஐரோப்பாவில் கலைத்துறையில் முன்னணியில் உள்ள பலர் வாழும் நாடாக ரஷ்யாவைக் குறிப்பிடலாம். கி.பி.968 முதல் சுமார் 600 வருடங்களாகக் கிறிஸ்தவ சமயத்தின் செல்வாக்குக் காரணமாக ரஷ்யக் கலை நன்று வளர்ச்சி பெற்றுக் காணப்பட்டது. ஓவியம், இசை, இலக்கியம் மற்றும் கட்டிட நிர்மாணம் என்பவற்றில் ரஷ்யர்கள் பிரசித்தி பெற்றவர்களாக இருந்தனர். கி.பி.1500 முதல் ரஷ்யக் கலைகளில் நவீன முறைகளின் இயல்புகள் படிப்படியாக உட்புகுந்தன. 18



ஆம் நூற்றாண்டளவில் ரஷ்ய இலக்கியங்கள் உலகப் புகழ் பெற்றன. அலெக்சாண்டர் புஸ்கின், நிகாலே கொகொல், இவான், டூர்கெனவ், பியதோரி, தொஸ்மோஸ்கி மற்றும் லியோ ரோல்ஸ் ரோய் போன்றவர்கள் ரஷ்ய இலக்கியத் துறையை முன்னெடுத்த புகழ் பெற்ற எழுத்தாளர்களாவர். அத்துடன் உலகப் புகழ் பெற்ற பலே மற்றும் பேரா எனும் கலைகளும் ரஷ்யாவில் உருவாகின.



## பொருளாதாரம்

சமவுடைமைப் பொருளாதாரத்திற்குப் பழகியிருந்த சோவியத் நாடு பிளவு பட்டபின் படிப்படியாகச் சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிச் செல்லத் தொடங்கியது. இதன் காரணமாக 1998 ஆம் ஆண்டளவில் அங்கு நடைபெற்று வந்த கைத்தொழில் பொருளாதாரமானது வீழ்ச்சி காணத் தொடங்கியது. அதன் தொடர்ச்சியாகச் சேவைகள் மற்றும் நுகர் பொருட்களுக்குச் சந்தை வாய்ப்புக்கள் அதிகரித்தன. பொரிஸ் செல்சின் அரசாங்கத்தில் இருந்த போது இத்தகைய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இதனடிப்படையில் இவருக்குப் பின் வந்த விளாடிமீர் புடின் காலத்தில் நிலைமையில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டது.

* தேறிய உள்நாட்டு உற்பத்தி : 1409 பில்லியன் டொலர்
* தேறிய உள்நாட்டு உற்பத்தி வேகம் : 43%
* தனி நபருக்குரிய வருமானம் : 9700 டொலர்
* வறியோரின் அளவு : 25%
* தொழிலாளர் எண்ணிக்கை : 71.8 மில்லியன்
* வேலையற்றோர் : 7.9%
* கைத்தொழில்கள் : நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு, இரசாயனப் பொருட்கள் மற்றும் உலோகப் பொருட்கள்.
* உற்பத்திகள் : சகல இயந்திர சாதனங்களினதும் உதிரிப் பாகங்கள், ஆகாய விமானங்கள் மற்றும் சகல வாகனங்களின் உற்பத்தி, செயற்கைக் கோள் மற்றும் தொலைத் தொடர்பு உபகரணங்களின் உற்பத்தி, உணவு வகைகள், ஆடை வகைகள் மற்றும் பாவனைப் பொருட்கள்.
* கைத்தொழில் உற்பத்தி வேகம் : 3.7%
* விவசாயப் பொருட்கள் : தானிய வகைகள், உருளைக் கிழங்கு, சூரியகாந்தி, மரக்கறி, பழவகைகள், இறைச்சி மற்றும் பால்.
* ஏற்றுமதிப் பெறுமானம் : 104.6 பில்லியன் டொலர்
* ஏற்றுமதிப் பொருட்கள் : பெற்றோலியம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள், இயற்கை வாயு, மரமும், மரப்பொருட்களும், உலோகப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் யுத்த தளபாடங்கள்.
* ஏற்றுமதி நாடுகள் : ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, சீனா, அமெரிக்கா மற்றும் சுவிட்ஸர்லாந்து, உக்ரேன், பைலோரஷ்யா.
* இறக்குமதிப் பெறுமானம் : 60.7 பில்லியன் டொலர்.
* இறக்குமதிப் பொருட்கள் : இயந்திர உதிரிப்பாகங்கள், பாவனைப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள், இறைச்சி, சீனி, உருக்குப் பொருட்கள்.
* நாணயம் : ரஷ்ய ரூபிள் (RUR)

## போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புகள்

வளர்ச்சி கண்ட நாடாக ரஷ்யா இருப்பதன் காரணமாக நன்கு முன்னேற்றமடைந்த போக்குவரத்து அமைப்பொன்று அவசியமாக உள்ளது. பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டுமாயின் போக்குவரத்து வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ரஷ்யாவிலுள்ள புகையிரதப் பாதையின் மொத்த நீளம் 86,000 கிலோ மீற்றராகும். 1990 ஆம் ஆண்டின் பின்பு ரஷ்யாவிலுள்ள மொத்தப் புகையிர[illegible] பாதைகளில் 50% மானவை செயலிழந்தவையாகக் காணப்பட்டன. சைபீரியப் புகையிரதப் பாதையானது உலகின் மிக நீண்ட புகையிரதப் பாதையாக உள்ளது. இதுவே உலகில் அதிக தரிப்பிடங்களில் நின்று செல்லும் புகையிரத மார்க்கமாக உள்ளது. ரஷ்யாவிலுள்ள பெருந்தெருக்களின் நீளம் 532,000 கிலோ மீற்றராக உள்ளது.

## நிர்வாகம்

1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ரஷ்யா சுதந்திர நாடாக மாறியது. 1993 இலிருந்து புதிய அரசியலமைப்பு ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டது. அரசியலமைப்பு அதிகாரம் பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. நீதிச்சேவையானது சுதந்திரமான அமைப்பாகச் செயற்படுகின்றது. நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்கள[illegible] ஜனாதிபதி பிரதானமானவராகக் கரு[illegible] படுகின்றார். அவர் 4 வருட காலத்திற்கு மக்கள் வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவார். பிரதமரைத் தெரிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு அதிகாரம் மேற்சபை மற்றும் கீழ்ச்சபை எனப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விரு சபைகளின் மொத்த உறுப்பினர் தொகை 450 ஆக உள்ளது.

எஸ். கிறேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராதன மருத்துவ முறையில் பிரபல்யம் பெற்றிருந்த ஔடத ஓடம்

ஆயுர்வேத வைத்திய முறையானது வாயு, பித்தம், சளி எனும் மூன்றை அடிப்படையாகக் கொண்டது. இம் மூன்றும் சேர்வதால் தான் நோய்கள் உருவாகுவதாக ஆயுர்வேத வைத்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந் நோய்களைக் குணமாக்க ஔடத நீர் அல்லது ஔடத எண்ணெயில் குளிப்பாட்டுதல் சிறந்த பரிகாரமாகக் கருதப்பட்டது. இதற்கு நோயாளியைக் குளிப்பாட்டுவதற்குக் கருங்கல் மற்றும் உலோகத்தால் செய்யப்பட்ட ஓடம் ஒன்றை ஓட வடிவில் ஒரு குளியல் தடாகத்தை உருவாக்குவார்கள். இதனை "ஔடத ஓடம்" என்று அழைத்தனர்.

## மருத்துவ ஓடத்தின் வரலாறு

புராதன வைத்திய முறையுடன் தொடர்புடைய "ஔடத ஓடம்" மிகப் பிரபல்யம் பெற்ற ஒன்றாகும். இலங்கையின் முதலாவது தொல்பொருள் ஆய்வாளரான எம்.சீ. பெல் அவர்கள் அநுராதபுரத்தில் தூபாராம விகாரையின் அருகில் மறைந்திருந்த கற்பானை ஒன்றைக் கண்டுபிடித்தார். ஆனால் இக் கற்பானையை அவர் "ஒரு பிணப்பெட்டியாகவே" இருக்கும் என்று முதலில் நினைத்தார். பின்பு "மூழ்க வைத்துச் செய்யும் சிகிச்சைக்காக பயன்படுத்தும் மருத்துவ ஓடம்" என முடிவுக்கு வந்தார்.

...க்க நாட்டில் இறந்தவர்களைப் புதைப்பதற்காகக் கற்பானைகளையே பயன்படுத்தியதாகக் கூறப்படுகின்றது. அதே போன்று இதுவும் பிணப்பெட்டியாகவே இருக்கலாம் எனப் பெல் அவர்கள் சந்தேகித்தார். பலகையால் செய்யப்பட்டிருந்த அப்பெட்டிகள் பிணங்கள் விரைவில் உக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டன. கற்களால் உருவாக்கப்பட்ட பெட்டிகளில் பிணங்கள் மருத்துவத் தைலங்கள் பூசப்பட்டுப் பாதுகாப்பாக இருக்கப் பயன்படுத்தப்பட்டன.

## அகழாய்வில் இருந்து மருத்துவ ஓடம்

தொல்பொருள் ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட மருத்துவ ஓடமானது 1901 ஆம் ஆண்டு மகா விகாரையின் அருகில் சுமார் 7 அடி 2 அங்குல நீளமும், 2 அடி உயரமும் கொண்ட மருத்துவ ஓடமாகும். இது நீண்டதாகவும் செவ்வக வடிவமுடையதாகவும் காணப்பட்டது. இதன் வெளிப்புறத்தில் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

16 வருடங்களின் பின் அநுராதபுரத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள மிகிந்தலைக்கு அருகில் உள்ள இடிபாடுகளுக்குள் இன்னுமொரு மருத்துவ ஓடம் கண்டுபிடிக்கப்பட்டது. பின்பு மெதிரிகிரிய, அம்பாறை, தீகவாபி, பொலன்னறுவை போன்ற இடங்களில் இவை கண்டு பிடிக்கப்பட்டன. இவ் ஓடங்கள் இருந்த இடங்களில் இருந்த கட்டிடங்களின் அறைகளில் இவ்வோடங்கள் அமைக்கப்பட்டிருந்தமையால் சிகிச்சைக்காக மட்டுமே இவை பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என நம்புகின்றனர். மிகிந்தலையில் கண்டு பிடிக்கப்பட்ட ஓடமானது மிகப் பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டிருந்தமையும், அது கிரனைட் கற்களால் உருவாக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வோடமானது 214 சென்ரிமீற்றர் நீளமும், 74.5 சென்ரிமீற்றர் அகலத்தையும் மற்றும் 57 சென்ரிமீற்றர் உயரத்தையும் கொண்டது. இவ் ஓடத்தின் அகலமானது பாதப் பகுதியை நோக்கிச் செல்லும் போது படிப்படியாகக் குறைந்து செல்கின்றது. இவ் ஓடம் மனித உருவத்தின் வடிவில் மிகவும் பாதுகாப்பான வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது என்பதுதான் இதனை நோக்கும்போது தெரிகின்றது.

இப்பானையானது தனியொருவரின் சுக நலனுக்காக மிகவும் கவனமாகவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. யாரேனும் குறித்த நபரின் அளவுகளினடிப்படையில் சிற்பிகள் ஓடத்தை அமைத்துள்ளதாகத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏனைய ஓடங்கள் சாதாரணமாக யாவருக்கும் சிகிச்சை செய்யக்கூடியதாகவே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அநுராதபுர காலத்தில் பிரபல்யமான ஒரு சிகிச்சை முறையாக இம் மருத்துவ ஓடச் சிகிச்சை காணப்பட்டது.

## மருத்துவ ஓடச் சிகிச்சை

ஆயுர்வேத வைத்திய முறையின் போது மருத்துவ நீர் மற்றும் எண்ணெய் வகைகளைத் தேய்த்து, குளிப்பாட்டுவதற்கு இந்த மருத்துவ ஓடம் பயன்படுத்தப்பட்டது. 13 ஆவது நூற்றாண்டில் பௌத்த பிக்கு ஒருவர் தாம் எழுதிய "யோகார்நய" மற்றும் "பிரயோக இரத்னாவலிய" ஆகிய நூல்களில் நீரில் மூழ்க வைத்துச் செய்யும் சிகிச்சை யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிகிச்சை முறையாக உள்ளது. இம் முறையின் கீழ் தோலின் மூலம் இவ் ஔடத நீர் மற்றும் எண்ணெய் உடலில் ஊறுவதற்கும் மற்றும் எந்தவித ஆபத்துக்களும் நேரிடாமல் சுகம் பெறவும் வழிவகுக்கின்றது. மருத்துவ மூலிகைகள், பால், நெய், எண்ணெய் மற்றும் வினாகிரி ஆகிய மருத்துவப் பொருட்களில் பல இதில் சேர்க்கப்படுகின்றன. மேலும் உடலில் மருந்து ஊறுவதற்கு ஒத்தடம் கொடுக்கும் முறையும் ஆயுர்வேத வைத்திய முறையில் உள்ளது.

உதாரணம் : சேற்று ஒத்தடம், துணிப் பொட்டலத்தால் செய்யும் ஒத்தடம், மரங்களின் இலைகளால் செய்யும் ஒத்தடம், ஔடத நீரால் செய்யும் ஒத்தடம்

## மருத்துவ ஓடத்தில் செய்யும் சிகிச்சைகள்

1. வாதம் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்காக பால், எண்ணெய், அல்லது மிதமான சூடுள்ள நீரினை ஓடத்தில் நிரப்பி அதில் மூழ்க வைத்தல்.

2. மூலம் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்காக சூடாக்கப்பட்ட ஆட்டுப்பால், சிறுநீர், பால் சுறா, சுறா வினாகிரி, வில்வ இலையால் உருவாக்கபட்ட ஔடத நீரால் குளிக்க வைத்தல்.

3. காய்ச்சல்
அதிக சூட்டைக் குறைப்பதற்காக மிதமான ஔடத நீரில் மூழ்க வைத்தல், பால், மதுசாரம் கலந்த நீர், நன்றாக அவித்த அரிசி (கசப்பு கஞ்சி) ஆகியவற்றில் மூழ்கவைத்து எடுத்தல்.

4. சரும நோய்கள்
ஔடத கசஷாயத்தில் மூழ்க வைத்தல்.

5. சிறுநீர் அடைப்பு
மூழ்க வைத்தல் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. (வாதம் மற்றும் பித்தம் அதிகரித்தல் காரணமாக ஏற்படும்) அறுவைச் சிகிச்சையின் பின் நெய் மற்றும் நல்லெண்ணெய் கலந்த மருத்துவக் கலவை நீரில் குளிக்க வைத்தல்.

## முறிவுகளுக்கு

முறிவு ஒன்று ஏற்பட்ட பின் அதனைக் குணப்படுத்தும் நோக்குடன் ஔடத நீரில் மூழ்க வைத்து எடுத்தல்.

## மூழ்கவைத்துக் குணப்படுத்துதல்

குருவானவர் ஒருவரினது அல்லது பிராமணர் ஒருவரினது ஆசீர்வாதத்தின் பின் நோயாளியின் உடலில் எண்ணெய் மற்றும் புளிப்பான பாலைத் தடவிப் பருத்திப் பஞ்சினால், தானியங்களான உழுந்து மற்றும் பல வகையான தானியங்களால் உருவாக்கப்பட்ட ஒரு களியினால் காதுகளை மூடுவார்கள். ஆமணக்கு, வரகு, கும்புறுடிளிங்கா, தொட்டில் போன்ற தானிய வகைகளால் உருவாக்கப்பட்ட சாற்றை ஓடத்தில் ஊற்றி மற்றும் நோயாளி தாங்கக் கூடிய வெப்பநிலையில் அதனுடன் நீரை ஊற்றுவார்கள். பின்பு ஓடத்தில் நோயாளியை நெடுகத் தூங்க வைப்பார்கள். சிரத்தின் மேற்பகுதி (தலை, முகம்) என்பவற்றைத் திரவ மட்டத்தைவிட மேலாக வைப்பார்கள்.

## மருத்துவ ஓடம் செய்யப்படும் முறை

மூழ்க வைப்பதற்காகச் செய்யப்படும் இவ் ஓடமானது தங்கம், வெள்ளி, செம்பு, கருங்கல் அல்லது மரம் என்பவற்றில் ஏதேனும் ஒன்றால் செய்யப்படும் என "யோகார்ஷனா" இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மரமானால் வேம்பு, விளாமரம், செஞ் சந்தனம் என்பவற்றிலேயே செய்யப்பட வேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஓடத்தின் நீளமானது 4 அடிக்கு குறையக்கூடாது. தலை, தோளின் அகலமானது 12 அங்குலமாகவும், அதன் ஆழமானது 1 அடி ஆழத்தாலும் இருக்க வேண்டும்.

புராதன மூழ்க வைத்தல் குறைந்தளவு மருத்துவ நீரைப் பயன்படுத்தி மிகச் சிக்கனமாகச் செய்வதற்காகவே இவ் ஓடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் பயன்படுத்திய தொழில்நுட்பத்தை நோக்கும் போது, அன்று நீரியல் தொழில்நுட்ப விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் இருந்துள்ளார்கள் என்று அறியக் கிடைக்கின்றது. இன்று மூழ்க வைத்துச் செய்யும் சிகிச்சை ஆயுர்வேத வைத்தியத்தில் செய்யப்படுவதில்லை. ஆனால் இன்று சிறிய நீச்சல் தடாகங்கள் போன்றவையே பயன்படுத்தப்படுகின்றன. எப்படியிருந்த போதிலும் இந்தவைத்திய முறையின் பெறுமதியை உணர்ந்த பலர் இதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சி புரட்சிய சிருஷ்

1789 ஆம் ஆண்டில் பிரான்சில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தைப் 'பிரான்சியப் புரட்சி' எனக் குறிப்பிடுவோம். இப் புரட்சியின் காரணமாகப் பிரான்சின் அரசியல், பொருளாதார, சமூக நடவடிக்கைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இந்த உள்நாட்டுக் கலகத்திற்குத் தலைமை தாங்கிச் சென்றவன் நெப்போலியன் போனபார்ட் எனக் கூறலாம்.

## பிரான்சியப் புரட்சி

18 ஆம் நூற்றாண்டில் பிரான்சில், அரச குடும்பத்தினர், சமய குருமார்கள், குடி மக்கள் என மூன்று பிரிவுகள் காணப்பட்டன. இதில் சாதாரண குடிமக்கள் அரசிற்குக் கட்டாயமாக வரி கட்டவேண்டும் என்பது சட்டமாகக் காணப்பட்டது. இவ்வரி உயர்வு காரணமாகக் குடிமக்கள் பல இன்னல்களை அனுபவித்து வந்தனர். பின்பு 1788 ஆம் ஆண்டில் பயிர் அறுவடை நாசமாகியதன் காரணமாகக் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. இதன் காரணமாகக் குடிமக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்தது. பலர் பசி பட்டினியால் மடிந்தனர். அரசினாலும் இது தொடர்பாக எதுவும் செய்ய முடியாமலிருந்தது. இந்நிலையில் சாதாரண குடிமக்களில் கல்வி கற்றவர்களாக இருந்தவர்கள் சிலர் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் நடைபெற்ற புரட்சிகள், அதனால் பெற்ற சுதந்திரம் பற்றியும், புரட்சி செய்த முறை என்பவற்றையும் நன்கு அறிந்திருந்தனர். இதன் காரணமாகப் பிரான்சிய அரசின் கெடுபிடி மற்றும் தொல்லைகளுக்கும் எதிராகக் கிளர்ந்தெழ முன்வந்தனர். 1789 ஆம் ஆண்டு பிரான்சிய அரசு நாட்டு மக்கள் மீது வரியை அதிகரித்ததன் காரணமாகக் குடிமக்கள் அதற்கெதிராகப் புரட்சி செய்யத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து சாதாரண குடிமக்களுக்கும் பிரான்சிய அரசிற்கும் இடையில் யுத்தம் மூழத் தொடங்கியது.

1614 ஆம் ஆண்டின் பின்பு கூடிய அரச சபை மீண்டும் 1789 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதியே திரும்பவும் கூட்டப்பட்டது. இதனடிப்படையில் சாதாரண குடிமக்கள் பிரான்சில் கூடிய இக்கூட்டத்தினைக் கலைத்தெறிய ஒன்று கூடினர். ஜுலை மாதம் 14 ஆம் திகதி பாஸ்டில் நகரில் அமைந்துள்ள சிறைச்சாலை உடைக்கப்பட்டதுடன் புரட்சி ஆரம்பமாகியது. உக்கிரமாக ஆரம்பித்த இந்த உள்நாட்டுப் போர் புதிய அரசு ஒன்று உருவாகிய பின்பே முடிவடைந்தது. பிரான்சிய மக்களால் கோரப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பவற்றை வழங்க புதிய அரசு உடன்பட்டது. இப்புரட்சி உள்ளூர் யுத்தத்தால் உருவாகியது என்பதனை 1795 ஆம் ஆண்டுப் புரட்சி எடுத்துக் காட்டியது.

## பிரான்சியப் புரட்சியின் சிருஷ்டி

நெப்பொலியன போனபார்ட் கோர்ஷியா என்ற தீவில் 1769 ஆம் ஆண்டு பிறந்தார். இத்தாலிய அரச வம்சத்தைச் சேர்ந்த ஒருவரின் மகனான இவர் பிரான்சிய இராணுவத்தில் சேர்ந்து பெயரும் புகழையும் பெற்றார். என்றாவது ஒருநாள் பிரான்ஸ் நாட்டின் தலைவனாகக் கூடிய வீரனின் இயல்புகளை இவர் பெற்றிருந்தார். 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே யுத்த சூழ்நிலையை உருவாக்குவதற்கு நெப்போலியன் முயற்சி செய்தார். பிரான்சின் பேரரசனாக வரவேண்டும் என்ற அவரது குறிக்கோளை நிறைவேற்றப் பல விதத்தில் முயற்சி செய்தார். 15 வயதில் பாரிஸிலுள்ள இராணுவப் பயிற்சிப் பாடசாலையில் மாணவனாகச் சேர்ந்தார். பின்பு 1785 ஆம் ஆண்டில் இராணுவ அதிகாரியாக இவர் நியமிக்கப்பட்டமை ஒரு விசேட அம்சம் எனலாம். இவர் பிரான்சியப் புரட்சிக்கு உதவியவனாக இருந்தமையால் மிகப் பிரசித்தி பெற்றவராகக் காணப்பட்டார். 1793 இல் பிரித்தானியா மற்றும் ஸ்பானியாவின் உதவியுடன் பிரான்சியக் கலகக்காரர்களைத் தோற்கடித்து டவ்லோன் துறைமுகத்தைக் கைப்பற்றினார். இது அவரது முதல் வெற்றியாக அமைந்தது. பின்பு பிரான்சிய அரசு தொடர்பாக இருந்த அவரது நம்பிக்கை அதிகரித்தது. இதனடிப்படையில் பாரிஸைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த கலகக்காரர்களை அழிக்கப் பிரான்சிய அரசு நெப்போலியனை அழைக்கத் தீர்மானம் செய்தது. இதனைத் தொடர்ந்து உள்நாட்டுக் கலகம் ஒன்று உண்டாவதற்கான சாத்தியக் கூறுகள் தென்பட்டன. 1796 இல் கட்டளையிடும் அதிகாரியாகப் பணியாற்றிய நெப்போலியன் 1797 இல் மிலான் மற்றும் மன்டுனா போன்ற நகரங்களைக் கைப்பற்றினார். சார்டினியா மற்றும் நேபல்ஸ் போன்ற

**1793 இல் பிரித்தானியா மற்றும் ஸ்பானியாவின் உதவியுடன் பிரான்சியக் கலகக்காரர்களைத் தோற்கடித்து டவ்லோன் துறைமுகத்தைக் கைப்பற்றினார். இது அவரது முதல் வெற்றியாக அமைந்தது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெப்போலியன்







நகரங்கள் இவரது பிடிக்குள் வந்தன. பின்பு எகிப்தியப் படையெடுப்பினைத் தடுக்க வேண்டுமானால் பிரித்தானிய மற்றும் இந்தியாவிற்கிடையிலான வர்த்தகப் பாதையைத் தடை செய்ய வேண்டுமெனப் பிரான்சியர் கருதினர். அதனடிப்படையில் பிரித்தானியாவில் பெருந்தொகையான வேலையற்றோர் தொகையை ஏற்படுத்தல் இவரது நோக் கமாக அமைந்திருந்தது. 1798 இல் பிரான்சின் இராணுவம் எகிப்தியரைப் பிரமிட் யுத்தத்தில் தோற்கடித்தது.

அதோடு ஒட்டோமன் துருக்கியரை அபவுகீர் குடாவில் நடந்த யுத்தத்தில் தோற்கடித்தார். நைல் யுத்தத்தில் நெல்சன் என்பவரின் கீழ் சென்ற பிரித்தானியப் படையைப் பிரான்சியப் படை தோற்கடித்தது.

பிரான்சின நிர்வாகத்தைத் தன் கைக்குள் கொண்டு வருவதை ஒரே நோக்கமாகக் கொண்ட நெப்போலியன் மிக்க வேதனையுடனும், வைராக்கியத்துடனும் பிரான்ஸ் திரும்பினார். இத்தகைய தருணத்தில் பிரான்சிற்குச் சிறந்த திறமையும், சக்தியும் கொண்ட தலைமைத்துவம் அவசியமாகக் காணப்பட்ட நிலையிலேயே நெப்போலியன் நாடு திரும்பினார். இவரது வருகையைப் பலர் வரவேற்றனர். 1799 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரான்ஸை நிர்வகித்து வந்த அரச சபை கலைக்கப்பட்டது. 1802 ஆம் ஆண்டு நெப்போலியன் பிரான்சின் முதலாவது கவுன்சிலராக நியமிக்கப்பட்டார். இரண்டு வருடங்களின் பின் பிரான்சின் பேரரசனாக நியமிக்கப்பட்டார். புரட்சி ஏற்பட்டதற்கான காரணங்களின் படி இவரது நியமனம் பிரான்சிய மக்களுக்கு ஓர் தீர்வாக அமைந்தது. நீதி அமைப்புகளுக்கூடாக நிலவுரிமை சம்பந்தமான உரிமைகள் பாதுகாக்கப்பட்டதுடன் மக்களிடையே சம அந்தஸ்தும் வழங்கப்பட்டது. மேலும் தாங்கள் விரும்பிய மதத்தைப் பின்பற்றும் சுதந்திரமும் பிரான்சிய மக்களுக்குக் கிடைக்கப் பெற்றது.



## நெப்போலியனின் யுத்தங்கள்

நெப்போலியன் மிக புத்தி சாதுரியமாகவும், சூட்சுமத்துடனும் நிர்வாகத்தை நடாத்தி வந்ததுடன் இவரது தலைமையின் கீழ் பல்லாயிரக் கணக்கானோர் யுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர். 1803 இலிருந்து 1805 வரை பிரான்ஸ் பிரித்தானியாவுடன் யுத்தத்தில் ஈடுபட்டு வந்தது. பல கடல் எல்லைகளை நிர்வகித்துப் பிரித்தானியாவிற்குச் சொந்தமான பிரதேசங்களை விரைவில் கைப்பற்றிப் பிரித்தானியாவைத் தோற்கடிக்க வேண்டுமென நெப்போலியன் திட்டமிட்டார்.

1805 ஸ்பானியர் மற்றும் பிரான்சியர்களுடன் இணைந்து நெல்சன் என்றழைக்கப்படும் தளபதியின் கீழ் சென்ற படை டிபல்கா சதுக்கத்தில் பிரித்தானியப் படையிடம் தோல்வி கண்டது. இதனால் கலக்கமடையாத நெப்போலியன் ஐரோப்பாவிற்குப் பிரித்தானியப் பொருட்களைக் கொண்டு செல்லும் போக்குவரத்து மார்க்கங்களைத் தடை செய்தார். ஆனால் இதற்குப் போர்த்துக்கல் உடன்படவில்லை. 1807 இல் பிரான்சியப் படையை ஸ்பானியாவிற் கூடாகப் போர்த்துக்கல் நாட்டை ஆக்கிரமிப்புச் செய்ய அனுப்பி வைத்தார். இதன் பின் அவ்வருடமே ஸ்பானிய அரசனைப் பலவந்தமாக வெளியேற்றி நெப்போலியன் தன் சகோதரன் ஜோசப் பொனபார்ட்டை ஸ்பானியாவின் அரசனாக்கினான். இந்நிலையில் பிரித்தானியா போர்த்துக்கல் நாட்டிற்கு உதவிகளை வழங்கியது. ஆனாலும் நெப்போலியனின் படைகளுக்கு முன்பு எதிர்த்து நிற்க முடியவில்லை. இதன் காரணமாக ஐரோப்பாவில் அதிக பிரதேசங்களுக்குப் பேரரசனாக நெப்போலியன் விளங்கினார்.

1812 ஆம் ஆண்டு ரஷ்யா மீது படையெடுத்து ஆக்கிரமிப்புச் செய்ய முயன்ற போதும் பிரான்சியப் படை பல கஷ்டங்களுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. 1813 ஆம் ஆண்டு நெப்போலியனின் பேரரசு வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. 1814 ஆம் ஆண்டு எல்கா தீவிற்கு நெப்போலியன் தப்பி ஓடினார். 1815 ஆம் ஆண்டு அவர் பிரான்சிற்குத் திரும்பி வந்தார். அங்கு அவருக்கு வீரனுக்குரிய மரியாதை மக்களால் வழங்கப்பட்டது. பின்பு அவர் திரும்பவும் புதிதாகப் படையொன்றைப் பெல்ஜியம் நாட்டிற்கு அனுப்ப முயற்சி செய்தார். அதன் பின் அவர் பர்சியாவில் லிக்னி யுத்தத்தில் தோல்வியுற்றார். திரும்பவும் வோட்டலூ யுத்தத்திலும் தோல்வியடைந்ததன் காரணமாக அவர் சென்.ஹெலனாத் தீவிற்கு நாடு கடத்தப்பட்டார்.



### நெப்போலியனைப் பற்றிய சுருக்கக் குறிப்புக்கள்

1769 – கோர்ஷியாவில் நெப்போலியன் பிறந்தார்.
1785 – பிரான்சிய இராணுவ அதிகாரியாக நியமனம்.
1795 – பிரான்சிய கலகக்காரர்களுக்கு உதவி புரிந்து அங்கு உள்நாட்டுக் கலவரம் ஏற்படாமல் தடுத்தல்.
1798 – நெல்சன் என்றழைக்கப்படும் தளபதி எகிப்தில் பிரான்சியப் படையைத் தோற்கடித்தல்.
1799 – திரும்பவும் பிரான்சிற்குத் திரும்பி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளல். இக்காலத்தில் பிரித்தானியா, ஒஸ்திரியா, ரஷ்யா மற்றும் துருக்கி என்பன பிரான்சிற்கு எதிராக ஒன்று சேர்தல்.
1801 –இக்காலப்பகுதியில் பிரித்தானியாவுடன் பிரான்ஸ் யுத்தத்தில் ஈடுபடல்.
1804 – நெப்போலியன் பிரான்சின் பேரரசனாக நியமிக்கப்பட்டார்.
1805 – டிபல்கா சதுக்கத்தில் நெல்சனின் படையால் நெப்போலியனின் படை தோற்கடிக்கப்படல்.
1806 – பேர்சியா படையில் நெப்போலியனின் படை தோற்கடிக்கப்படல்.
1807 – நெப்போலியன் படை ரஷ்யாவை ஆக்கிரமித்தல்.
1808 – ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பல நாடுகளில் சண்டை மூளுதல்.
1809 – நெப்போலியன் அவுஸ்திரியா பேரரசனுடைய மகளைத் திருமணம் முடித்தல்.
1811 – நெப்போலியனின் மகனான 2வது நெப்போலியனின் பிறப்பு.
1813 – நெப்போலியனின் படை ஸ்பானியாவிலுள்ள லிப்சிக் யுத்தத்தின் பின் அதிகளவில் பின்வாங்கிச் செல்லல்.
1814 – நெப்போலியன் எல்பா தீவிற்கு நாடு கடத்தப்படல்.
1815 – திரும்பவும் நெப்போலியன் பிரான்சிற்கு வருகை தரல். ஜூன் மாத்தில் வோட்டலூ போரில் பெரும் தோல்வியைச் சந்தித்தல்.
1821 – நெப்போலியன் சென்.ஹெலனா தீவிற்கு நாடு கடத்தப்பட்டு அங்கு மரணமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் புழு

1. மண் புழுக்கள் மனிதனுக்குத் தீங்கு விளைவிக்காதவை.
2. நிலத்தை மென்மையாக வைத்துக் கொள்வன.
3. இவை காற்று மாசுபடுதலைத் தடுக்கவல்லன.
4. இவற்றிற்குக் கண்களோ,காதுகளோ இல்லை.
5. ஆனால் ஒளியையும், அதிர்வையும் உணரும் ஆற்றல் மிக்கன.
6. இவற்றிற்கு எலும்புகள் கிடையாது.
7. இறப்பர் போன்ற அமைப்பைக் கொண்டவை. இவற்றின் பின் துண்டத்தை வெட்டிவிட்டால் மீண்டும் வளர்ந்து கொள்ளும்.

**வி.ஷோபனா, தரம் - 04, கே.ஸீ.ஐ.பாடசாலை, வெள்ளவத்தை.**

# சிவனொளிபாத மலை

எமது இலங்கை நாட்டின் தென் மத்திய பாகத்தில் மிக உயர்ந்து நெருங்கியிருக்கும் மலைகளில் சிவனொளி பாத மலை தனிச் சிறப்புடையதாகும். இம்மலையானது பண்டைக் காலந் தொட்டுத் தெய்வத் தன்மை பொருந்திய மலையென்று பல மதத்தவராலும் போற்றப்படுகின்றது. சாதி சமய வேறுபாடு இன்றி, இம்மலைக்கு ஆண்டு தோறும், சென்று தத்தமது புண்ணிய தலமாக இதைக் கருதிப் பல மதத்தவர்களும் வழிபட்டு வருகின்றனர்.

இம்மலையின் உச்சியில் காணப்படும் அடிச்சுவட்டினை இந்துக்கள் சிவனுடையது என்றும், பௌத்தர்கள் புத்தபெருமானுடையது என்றும், முஸ்லிம்கள் ஆதமுடையது எனவும் கிறிஸ்தவர்கள் தோமஸ் நாயனாருடையது என்றும் கூறுகின்றனர். இம்மலையின் உயரம் 7360 அடியாகும்.

**பாத்திமா ஷர்மிளா, தரம் - 08ᴳ1, மதீனா தேசிய பாடசாலை, சியம்பலாகஸ்கொடுவை.**





# என் அம்மா

பத்து மாதம் சுமந்தாயே!
பாசமுள்ள தாயே நீ!

கண்ணான பொன்னும் நீயே!
கண்ணாக வளர்த்தாயே!

அம்மா என்று உன்னைப்
பாசத்துடன் அழைப்பேனே!

**எப். இஜால் முபாரக், தரம் 01, அநு/ஸாஹிரா ம.வி, அநுராதபுரம்.**





# வாசிப்பில் பயன் பெறுவோம்!

"பொன்னான நேரத்தை மண்ணாக்காதே" என்பது ஒரு முதுமொழியாகும். எனவே, மனிதர்களாகப் பிறந்த நாம் எமது வாழ்நாளில் கிடைக்கும் நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிக்கப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். எமது அத்தியாவசியத் தேவைகளுக்காக நேரத்தைப் பயன்படுத்தி எஞ்சுகின்ற நேரமே பொழுது போக்குக்குரிய நேரமாக அமைகிறது.

மாணவர்களாகிய நாம் எமது இளமைக்காலம் தொட்டே எமது பொழுது போக்கை, பயனுள்ள பொழுது போக்காகப் பயன்படுத்தினால் மிகவும் நல்லது. நாம் பொழுது போக்குகள் பலவற்றில் ஈடுபடலாம். அவையாவன : முத்திரை சேகரித்தல், தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல், விளையாட்டுக்களில் ஈடுபடல், கதைப்புத்தகங்கள் வாசித்தல், பிறமொழிப் புத்தகங்கள் வாசித்தல் மற்றும் பொது அறிவுப் புத்தகங்கள் வாசித்தல், பத்திரிகை வாசித்தல், கணினியை இயக்குதல் என்பனவாகும்.

வாசிப்பு ஒரு மனிதனை முழு மனிதன் ஆக்குகின்றது. இப்பழக்கம் மனிதனது ஆளுமையைப் பெரிதும் விருத்தி செய்கிறது. எனவே தான் வாசிப்பைப் பயனுள்ள பொழுது போக்காக நாம் கூறமுடிகிறது.

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு." எனவே வாழ்நாளில் எமக்குக் கிடைக்கும் பொழுதினை, பரந்த கல்வியைக் கற்றலுக்கு ஏற்ற சாதனமான, வாசிப்பிற்கு பயன்படுத்திப் பயனுள்ள வழியில் பொழுதைக் கழிப்போம்.

**ஞா.குயிலன், இந்துக்கல்லூரி, கொழும்பு - 04.**

மாணவர் ஆக்கங்கள்

# ஆரோக்கிய வாழ்விற்கு..

ஆரோக்கியமாக வாழ்வதற்குக் கீழ்க்காணும் வழிமுறைகளைக் கடைபிடித்துப் பாருங்களேன். நல்ல உடல் ஆரோக்கியம் பெறலாம்.

* ஒரு நாளைக்கு 8 குவளை (கிளாஸ்) நீர் அருந்தவும்.
* ஒவ்வொரு வேளைச்சாப்பாட்டின் போதும் 2 காய்கறிகளையும், 1 பழத்தையும் சேர்த்துக் கொள்ளவும்.
* ஒவ்வொரு வேளை சாப்பாட்டின் முடிவிலும் ஒரு பச்சைக் காய்கறிச் சலாட்டையும் சாப்பிடவும்.
* மாலை வேளைகளில் வெவ்வேறு விதமான முளைவிட்ட பயறுகளைச் சாப்பிடவும்.
* காலையில் எழுந்ததும் வெதுவெதுப்பான ஒரு டம்ளர் நீரில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து குடிக்கவும்.
* வாரத்தில் ஒரு நாள் காலை உணவாகப் புதிய பழங்களை மட்டும் உண்ணவும்.
* எண்ணெயில் பொரித்த உணவு வகைகளைச் சாப்பிடுவதை முடிந்த மட்டில் குறைத்துக் கொள்ளவும்.
* அதிகமான ஐஸ்கிரீம், சொக்லட், குளிர்பானங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல.

**எம்.எம்.தர்ஜுமில்லத், தரம் - 11ᶜ, பொ/மத்திய கல்லூரி, பொத்துவில்.**



# இன்பம்

கடமையில் கருத்தாய் நின்று
காலத்தில் முடிப்பது இன்பம்!
மடைமையை வென்று நித்தம்
மாட்சிமை புரிவது இன்பம்!
பற்றுடன் பாடங் கேட்டுப்
பள்ளியில் பயில்வது இன்பம்!
கள்ளமில்லா நட்பை வளர்த்துச்
சிரித்து வாழுதல் இன்பம்!
வாய்மை வழியில் நின்று
வாழ்ந்திட முனைவது இன்பம்!
சேய்மை என்னும் கல்வி
தேடிப் பெறுதல் இன்பம்!

**ஏ.சஜராஸ், தரம் - 10, அல்/மதீனா முஸ்லிம் ம.வி, மாஹேறா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் அறிவாளி?

குடையூர் என்பது ஒரு பின்தங்கிய கிராமமாகும். இங்கு ஒரே ஒரு பாடசாலைதான் உள்ளது. அதிலும் மிகவும் பழைமையான கட்டிடத்தைக் கொண்டுள்ள இந்தப் பாடசாலையில் நீண்ட காலமாகப் புதுப்பித்தல் வேலைகள் எதுவுமே நடந்ததில்லை. இதனால் ஊர் மக்களுக்குத் தமது பாடசாலை இந்த நிலையில் இருப்பதை எண்ணி மிகவும் கவலையாக இருந்தது. இப்படித்தான் ஒரு நாள் ஊர் மக்களில் சிலர் சின்னப்பு என்பவரின் தேநீர் கடைக்கு எதிரே நின்றவாறு இந்தப்பாடசாலையின் நிலையைப் பற்றி மிகுந்த அக்கறையுடன் பேசிக் கொண்டிருந்தனர்.

"இந்தப் பாடசாலை சாதாரண பாடசாலை இல்லை. ஊரில எத்தனையோ திறமைசாலிகளை உருவாக்கிய பாடசாலை இது" எனக் கனகசபை என்பவர் கூறினார். பதிலுக்கு இராமசாமி என்பவர் "எங்களுக்குத் தான் படிக்க முடியாமல் போனது. நமது பிள்ளைகளாவது படித்துப் பெரியவர்களாகட்டும். அதற்கு இந்தப் பாடசாலை உறுதியாக இருக்க வேண்டும் அல்லவா?" என்றார்.

முத்து என்பவர் "என்னிடம் நல்ல பண வசதி உள்ளதென்றால், நானே எனது செலவில் இந்தப் பாடசாலையைப் புதுப்பித் விடுவேன்" என அனைவரையும் பார்த்து வீறாப்புடன் கூறினார். அப்போது தேநீர்க்கடை சின்னப்புவும் தன் பங்கிற்கு எதையோ, கூற உடனே அங்கிருந்தவர்கள், "சின்னப்பு நீ சும்மா ஒன்றும் ஆலோசனை கூறத் தேவையில்லை. பெரியவர்கள் நாங்கள் பேசி இதுக்கு நல்ல முடிவெடுப்போம்" எனக் கூறி அவனின் வாயை அடைத்தனர். சாதாரண ஒரு தேநீர்க்கடைகாரனுக்கு இது தேவையற்ற விடயம் என்றே அவர்கள் இவ்வாறு அவனைப் பேசவிடாமல் தடுத்தனர். தேநீர்க்கடை சின்னப்புவும் எதிர்த்துப் பேசத் துணிவின்றி இவர்கள் பேசிக் கொள்வதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். பாடசாலையைப் புதுப்பித்தல் தொடர்பாக ஆளுக்கு ஆள் பலவிதமான யோசனைகளை முன் வைத்தனர். ஆயினும் எவ்வாறு செயற்படுத்துவது என்பது பற்றி யாருமே உருப்படியாக எதனையும் கூறவில்லை.

இறுதியில் எந்தவித முடிவுமின்றி வெறும் வெட்டிப் பேச்சாகவே அது முடிந்தது. மாலையாகிக் கொண்டிருந்தமையால் எல்லோரும் அவரவர்களின் வீடுகளுக்குச் சென்று விட்டனர்.

மறுநாள் காலையும் விடிந்தது. குடையூரிலுள்ள மக்கள் அனைவரும் அந்தப் பாடசாலையின் அருகே கூட்டம் கூட்டமாக குழுமியிருந்தனர். அங்கு காணப்பட்ட சுவரொட்டியொன்றையே எல்லோரும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். சுவரொட்டியின் அருகே நிறையச் செங்கற்களும் காணப்பட்டன. சுவரொட்டியில் என்ன எழுதப்பட்டிருந்ததென்றால்-

"பழைய மாணவர்களே! இந்தப் பாடசாலையைக் கட்டியெழுப்புவதில் உங்களது பங்களிப்பும் தேவை. எனவே, ஆளுக்கு ஒரு செங்கல்லை நன்றிக் கடனாகக் காணிக்கையாகச் செலுத்துங்கள்" என எழுதப்பட்டிருந்தது. இதனைப் பார்த்த ஊரிலுள்ள இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் ஆளுக்கொரு செங்கல்லைப் பாடசாலையின் அருகே போடத் தொடங்கினர். இன்னும் பலர் ஏனைய தேவைகளையும் செய்து கொடுக்க முன் வந்தனர். இதனால் பாடசாலையைப் புதுப்பித்துக் கட்டி முடிப்பதற்குத் தேவையான எல்லாமே கிடைத்தன.

இத்தனை நன்மையைச் செய்த அந்தச் சுவரொட்டியை எழுதியது யார்? என ஊரில் எல்லோரும் ஆளை ஆள் கேட்டுக்கொண்டனர். பின்னர்தான் தெரிய வந்தது. தேநீர்க்கடைச் சின்னப்புதான் இதனை எழுதி ஒட்டியுள்ளார் என்பது. எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். சின்னப்புவை அழைத்து இது பற்றிக் கேட்டனர்.

"ஆமாம். நான்தான் அதனை எழுதினேன். நான் வேறு ஊர்க்காரனாக இருந்தாலும் நானும் நன்றாகப் படித்தவன் தான். அதனால் இந்தப் பாடசாலையின் அருமை எனக்கும் புரிந்தது. எனவே தான், அவ்வாறான சுவரொட்டியொன்றை ஒட்டினேன்." என அவன் கூறினான். ஊரார் எல்லோரும் வெட்கித் தலை குனிந்தனர்.

**ஒருவனது அறிவையும், திறமையையும், அவன் செய்யும் தொழிலை வைத்து மட்டும் அளக்கக்கூடாது! சிறிய தொழில் செய்பவன் கூடத் திறமைசாலியாக, அறிவாளியாக இருக்க வாய்ப்புக்கள் உள்ளன. எனவே, எப்போதும் நாம் பிறர் கருத்துக்கு மதிப்புக் கொடுக்கக் கற்றுக் கொள்வது நல்லது. தேநீர்க்கடைச் சின்னப்புவின் விடயத்தில் கூட ஊரவர்கள் ஆரம்பத்திலேயே அவனது பேச்சிற்கு மதிப்புக் கொடுத்திருந்தால் பின்னர் வெட்கித் தலை குனிய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காதல்லவா?**


## விஜய் சந்தா விபரம்

**'விஜய்' பத்திரிகையினைக் கீழ்க்காணும் சந்தாத் தொகையினைச் செலுத்தித் தபாலிலும், நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ 269/= | ரூ 130/= |
| தபாலில் | ரூ 364/= | ரூ 182/= |

**பின்வரும் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்**
**(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)**

பெயர்/Name ----------------------------------------
முகவரி/Address ----------------------------------------
தொ.பே.இல/T.P No: ----------------------------------------
மின் அஞ்சல்/E-mail ----------------------------------------
விண்ணப்பிப்பது : பாடசாலை/நிறுவனம்/வாசகர் (தேவையற்றதை வெட்டிவிடுங்கள்)
எமக்கு ................. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்

கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ, காசோலை யாகவோ அனுப்பலாம். காசுக் கட்டளையை (MO) மாற்றும் தபால் கந்தோர்: **SLAVE ISLAND POST OFFICE** எனக் குறிப்பிட்டு, **CIRCULATION MANAGER, Wijeya News Papers Ltd, No-08, Hunupitiya Cross Road, Colombo 02** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். காசோலை அனுப்புவோர் **Wijeya News Papers Ltd** என்ற பெயருக்கு எழுதவும்.
**மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல : 2314714 ext -523**
**Email: vijey@wijeya.lk**


## விஜய் மாணவர் கழகம்



**ஆர்.நகுலேஸ்வரன்,**
தரம் - 08,
க/கலைவாணி தமிழ் வி,
புப்புரஸ்ஸ.
**அங்கத்துவ இல-325**



**பிரவீணா சுப்பிரமணியம்,**
தரம் - $10^{B}$,
யா/வேம்படி மகளிர் உ/த
பாடசாலை, யாழ்ப்பாணம்.
**அங்கத்துவ இல-326**



**எம்.ஹுஸைன்,**
தரம் - $12^{A}$ (கணிதம்),
க/ஸாஹிரா தேசிய
பாடசாலை, கல்முனை.
**அங்கத்துவ இல-327**



**கே.பார்த்திபன்,**
தரம் - 08,
கொ/மெதடிஸ்ட் த.வி,
கொழும்பு.
**அங்கத்துவ இல-328**



**ஜீ.மெடோனா,**
தரம் - $10^{A}$,
பண்டாரவளை தமிழ்
கல்லூரி, பண்டாரவளை.
**அங்கத்துவ இல-329**



**வ.நிசாந்தராஜா,**
தரம் - $11^{A}$,
பது/ஸ்பிரிங்வெளி த.வி,
பதுளை
**அங்கத்துவ இல-330**



**ஜி.தெபோரா,**
தரம் - $07^{A}$,
இரஜவெல தமிழ் தே.க,
கென்கல்ல.
**அங்கத்துவ இல - 331**



**நே.மேரிசிந்துஜா,**
தரம் - 13 (உ/த)
மன்/பரிகாரிகண்டல் ம.வி,
மன்னார்.
**அங்கத்துவ இல-332**



**யோ.கிருபாஜினி,**
தரம் - 08,
யா/இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
**அங்கத்துவ இல-333**



**பா.வினோஜன்,**
தரம் - $09^{B}$,
ஸ்ரீ இராமகிருஷ்ணா
ம.க, கலஹா.
**அங்கத்துவ இல-334**



**இ.குருசாந்,**
தரம் - 09,
யா/இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
**அங்கத்துவ இல-335**



**எம்.இஜால்,**
தரம் $11^{B}$,
புனித சவேரியர் கல்லூரி,
நுவரெலியா.
**அங்கத்துவ இல-336**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனும் சந்திரமுகியும்

அத்தியாயம்-3 கோபன்

மாயக்கிழவியை ஒழித்துக் கட்ட ஒரு சரியான சந்தர்ப்பத்தைத் தேடிக் கொண்டிருந்தாள் சந்திரமுகி. தன் தமையனை எப்படியாவது காப்பாற்றி விட அவள் நெஞ்சு துடித்தது. அவள் மனதில் திடீரென அந்த யோசனை பளிச்சிட்டது.

அவள் இரண்டு, மூன்றடி பின்னோக்கி ...கர்ந்து பின் முழு வேகத்துடன் மாயக் ...ழவியை நோக்கிப் பாய்ந்து சென்றாள். ...ாயக்கிழவி இன்னமும் அடுப்புத் தயாராகி ...கா? என்று பார்ப்பதில் கவனமுடன் ... சந்திரமுகி பின்னால் வருவதைக் ...வில்லை. அத்துடன் சந்திரமுகியை ... என்றே ஏளனத்துடன் நினைத் ...ல் சிறு பதர் புயலென வரு ... அறியவில்லை.

...டன் பாய்ந்து வந்த சந்திரமுகி ... பலத்தையும் திரட்டிக் கிழவி ...ணை அடுப்புக்குள் தள்ளிவிட் ... தீக்குள் விழுந்த மாயக்கிழவி பெருங் ...லெடுத்து அலறினாள். பின் தீக்குள் கரு ...ம்பலானாள். சந்திரமுகிக்கு இன்னமும் ... தெளியவில்லை. அவள் உடல் நடுங் ...தறியது.

அவள் சிறிது நேரம் மௌனமாக அசையாது இருந்தாள். மந்திரக் கிழவி இறந்து விட்டிருப்பாளா? என்று இன்னமும் சந்தேகமாக இருந்தது. அதனை உறுதி செய்யச் சிலநேரம் காத்திருந்தாள்.

> **அவள் சிறிது நேரம் மௌனமாக அசையாது இருந்தாள். மந்திரக் கிழவி இறந்து விட்டிருப்பாளா? என்று இன்னமும் சந்தேகமாக இருந்தது. அதனை உறுதி செய்யச் சிலநேரம் காத்திருந்தாள்.**

பின் சந்திரனை அடைத்து வைத்திருந்த கூட்டுக்கான சாவியைத் தேடினாள். அவற்றைக் கிழவி தன் தலையணைக்கடியில் மறைத்து வைத்திருந்தாள். அவற்றை எடுத்துச் சென்று மிகச் சிரமப்பட்டுத் திறந்தாள்.

தன் தங்கையால் விடுவிக்கப்பட்ட சந்திரன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். அவளை ஆரத் தழுவி உச்சியில் முத்தமிட்டான். அவர்கள் துள்ளிக் குதித்துச் சந்தோஷத்துடன் கும்மாளமிட்டார்கள்.

சந்திரன் தன்னை அண்மித்த தங்கையைக் கவனித்தான். அவள் உணவின்றி உடல் மெலிந்து வெளிறிப் போயிருந்தாள். அவன் தங்கையிடம் கூறினான். "என் அன்பான தங்கையே! நீ மெலிந்து பலவீனமாகிப் போய்விட்டாய். முதலில் சில நாட்கள் இங்கு தங்கி உன் உடலைத் தேற்றிக் கொண்டு, அப்புறம் வீட்டுக்குப் புறப்படுவோம்"

அன்றிலிருந்து சந்திரன் தன் தங்கையை மிகக் கவனித்துப் பார்த்துக் கொண்டான். உணவு சமைப்பது, உடைகளைத் துவைப்பது, வீட்டைச் சுத்தம் செய்வது எல்லாவற்றையும் தானே கவனித்துக் கொண்டான். சந்திரமுகி அண்ணனின் உபசரிப்பில் நன்கு உண்டு, குடித்து, உறங்கினாள்.

ஒருநாள் அவர்கள் வீட்டை நன்கு ஆராய்ந்து பார்த்தார்கள். வீட்டின் ஒரு புறத்தில் பரண் ஒன்று இருப்பதை அவதானித்தார்கள். ஏணி வைத்து அதில் ஏறினார்கள். அங்கே பெறுமதி மிக்க முத்து, இரத்தினங்கள், தங்கக் காசுகள், ஆபரணங்கள் என்பன இருந்தன.



அவர்கள் அவற்றையெல்லாம் ஒரு பையில் போட்டு எடுத்துக் கொண்டார்கள்.

ஒருநாள் அவர்கள் தம் தந்தையின் வீட்டைத் தேடிப் புறப்பட்டார்கள். அவர்கள் அங்கும், இங்கும் அலைந்து திரிந்து இறுதியில் தம்மை முன்பு தம் தந்தை விட்டுச் சென்ற இடத்தை அடைந்தார்கள்.

அவர்களுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அன்று அவ்விடத்தில் தங்கினார்கள். அடுத்தநாள் விடிந்த உடனேயே மீண்டும் தம் கிராமத்தைத் தேடிச் சென்றார்கள். செல்லும் வழியெல்லாம் தாம் முன்பு அறிந்த மரங்கள், இடங்கள், நீர்வீழ்ச்சிகள், குகைகள் என்பவற்றை அடையாளம் கண்டு தாண்டிச் சென்றார்கள். பின் மாலையானதும் ஒருவாறு கிராமத்தை அடைந்தார்கள்.

அவர்கள் வீட்டையடைந்து கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்து அவர்களைக் கண்ட தந்தை பெருமகிழ்ச்சியால் அவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டார். அவர் கண்களில் காணாமல் போன பிள்ளைகள் மீண்டும் கிடைத்ததில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

தந்தை அவர்களுக்குத் தான் அநீதி இழைத்து விட்டதாகக் கூறி மன்னிப்புக் கோரினார். அப்போது அவர்கள் சித்தியும் அங்கே வந்தாள். சித்தியானவள் என்னதான் குழந்தைகளை வெறுத்தாலும் பின்னர் தான் செய்தது மாபெரும் தவறு என்பதை உணர்ந்திருந்தாள். அவர்கள் பிறகு காடெல்லாம் பிள்ளைகளைத் தேடிப் பார்த்து மிகுந்த விசனத்துடன் தந்தையும் சித்தியும் வாழ்ந்து வந்தனர்.

இப்போது பிள்ளைகள் வந்து சேர்ந்ததால் அது அவர்கள் இருவருக்கும் பெரும் சந்தோஷத்தை அளித்தது. பிள்ளைகளும் தம் சித்தியை மன்னித்து ஏற்றுக் கொண்டார்கள்.

சந்திரனும் சந்திரமுகியும் தாம் எவ்வாறு மாயக் கிழவியிடம் மாட்டிக் கொண்டோம் என்று விபரித்தார்கள். சந்திரமுகியின் வீரக்கதையை ஊர்ப்பிள்ளைகள் எல்லாம் கேட்டுப் பெரிதும் வியப்படைந்தார்கள். நீண்டகாலம் அவர்கள் கதையை ஊரார் பேசினார்கள்.

சந்திரனும், சந்திரமுகியும் கொண்டு வந்திருந்த தங்கம், வைரம், முத்து, இரத்தினங்கள், ஆபரணங்கள் என்பவற்றைத் தந்தையிடமும் சித்தியிடமும் கொடுத்தார்கள். சித்தியோ து...ளிக் குதித்து அதிக மகிழச்சியடைந்தாள். அந்தச் செல்வத்தைக் கொண்டு அவர்கள் அதன்பின் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

(முற்றும்)




படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அம்மாடியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர் :...........................................

முகவரி :.........................................

.........................................

பாடசாலை :.........................................

வகுப்பு :.........................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்குச் சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாகச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

# அமெரிக்கா கவலையில்..




கடந்த ஜூன் மாதம் 17ம் திகதி ஈரானில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மஹ்மத் அஹமடின்ஜாத், தான் ஈரானில் ஆரோக்கியமான ஓர் இஸ்லாமிய சமூகத்தைக் கட்டியெழுப்பப் போவதாக அறிவித்துள்ளார். அமெரிக்க எதிர்ப்பாளரான இவர் ஈரானின் அணு ஆயுத வேலைத்திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுப்பார் என்ற கருத்தும் பரவலாக நிலவி வருகின்றது.

இதே வேளை, மஹ்முத் அஹமடின்ஜாத்தை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற, ர.'. ப்சன்ஜானி, தான் இந்தத் தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை எனவும், ஜனநாயக வரைமுறையின் படி இத்தேர்தல் நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மஹ்முத் அஹமடின்ஜாத்தின் வெற்றியானது அமெரிக்காவிற்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியிருப்பதாகவும் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

# உலகச் சனத்தொகைப் பெருக்கத்தில் ஆசியா முதலிடத்தில் உள்ளது



உலகின் சனத்தொகைப் பெருக்கமானது 650 கோடியை எட்டியுள்ளதாகப் பிரான்சிலுள்ள உத்தியோகப்பூர்வ நிறுவனமொன்றின் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 650 கோடி மக்களில் பெரும் பகுதியினர் ஆசிய நாடுகளிலேயே வசிப்பதாகவும் இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது நூறு பேருக்கு 6 பேர் எனும் கணக்கில் மக்கள் ஆசிய நாடுகளில் வாழ்ந்து வருகின்றனராம். உலகில் சனத்தொகைப் பெருக்கம் தொடர்பான மாநாடொன்று பரிஸ் நகரில் நடைபெறவுள்ளமையினை முன்னிட்டே மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு நூறு குழந்தைகளிலும் 57 பேர் ஆசிய நாடுகளிலும், 26 பேர் ஆபிரிக்க நாடுகளிலும், 9 பேர் லத்தீன் அமெரிக்கக் காடுகளிலும் 5 பேர் ஐரோப்பாவிலும் 3 பேர் வட அமெரிக்காவிலும் பிறப்பதாக இந்த ஆய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சனத்தொகைப் பெருக்கமானது நாளடைவில் இன்னும் அதிகரிக்கலாம் எனவும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு கிட்டத்தட்ட 2050 ஆம் ஆண்டை அடைகையில் உலகச் சனத்தொகை ஆயிரம் கோடியைத் தாண்டிவிடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதல் கணிசமான தொகையினர் ஆசிய நாடுகளிலேயே பிறப்பர். ஆசிய நாடுகளின் அபிவிருத்தியிலும் இது தாக்கங்களை விளைவிக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

# சீனாவில் மீண்டும் 'சார்ஸ்' பீதி



அண்மையில் சீனாவில் 'சார்ஸ்' எனப்படும் 'பறவைக் காய்ச்சல்' வியாதியின் காரணமாக ஏராளமான கோழிகள் இறந்தமையும், மக்கள் ஏராளம் பேர் பாதிக்கப்பட்டமையும் நாம் அறிந்ததே! ஒரு சில வருடங்களே கடந்துள்ள நிலையில் மீண்டும் H5NI என்றொரு புது வகைத் தொற்று வியாதி சீனாவில் தற்போது பரவி வருகின்றது. இதனால் ஏராளமான கோழிகள் ...முற்றுள்ளனவாம்! 2003 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நோயாளி ஒருவரைச் சோதித்த போதே 'சார்ஸ்' எனப்படும் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இருந்தும் பின்னர் அது கடும் பிரயத்தனங்களின் பின்னர் கட்டுப்படுத்தப்பட்டது. இருப்பினும் மீண்டும் அதே போன்றதோர் தொற்று வியாதி பரவத் தொடங்கியுள்ளதனால் இது குறித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்ட மருத்துவர்கள் இது 'சார்ஸ்' அல்ல எனவும் H5NI எனப்படும் புது வகை வைரஸ் காய்ச்சல் எனவும் அடையாளப் படுத்தி யுள்ளனர்.

இருப்பினும் சார்ஸ் மற்றும் H5NI ஆகிய வியாதிகள் இரண்டும் இரு வேறு வகையானவை என்பதை அறியாத சீன மக்கள் H5NI தொற்று வியாதியைச் 'சார்ஸ்' வியாதி எனக் கருதிப் பீதியுற்றிருப்பதாகவும் அறிய வருகின்றது. இதனால் மருத்துவவியலாளர்கள் சீன மக்களுக்கு இது குறித்து விளக்கங் களை வழங்கப் பெரும் பிரயத்த னங்களில் ஈடுபட்டுள்ளனர்.

## அற்லஸ் கேள்வி - 18

**கேள்வி**

ஈரான் நாட்டின் புதிய ஜனாதிபதியின் பெயர் என்ன?

சரியான விடை :..............................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதிஅனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம்,
கேள்வி - 18,
விஜய்,
த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 16 இன் சரியான விடை :- வேல்ஸ் பிராந்தியத்தின் றகர் விளையாட்டு வீரர்.**

ஆர்.கோகுலன், தரம் - 04H,
ரோயல் கல்லூரி,
கொழும்பு - 07.


கே.சௌமியா, தரம் - 07T,
பெண்கள் உ/த பாடசாலை,
கண்டி.

எம்.ஏ.எம்.நுஸ்லா,
தரம் - 11, இல:8/6,
தக்கியா வீதி,
காலி.

# குற்றம் நிரூபிக்கப்பட்டால் சதாமுக்கு மரண தண்டனை

அமெரிக்காவினால் சிறை வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசேன் தொடர்பான வழக்கு விசாரணைகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்வதற்கு மேற்படி வழக்கு விசாரணைகளை நடத்தி வருகின்ற நீதிபதியே அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் உலக நாடுகளிலுள்ள மக்கள் சி.என்.என் தொலைக்காட்சி வழியே சதாம் ஹுசேனின் வழக்கு விசாரணைகளைப் பார்த்து வருகின்றனர். இவ்வாறே 1982 ஆம் ஆண்டுக் காலப் பருவத்தில் ஈராக்கின் 'வுஜாலி' என்ற கிராமமொன்றில் 143 பேரைக் கொலை செய்தமை தொடர்பாகச் சதாம் ஹுசேனிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் காட்சியும் அண்மையில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகளில் மேற்படி கொலைகளைச் சதாம் ஹுசேன்தான் செய்தார் என்பது நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை தீர்ப்பாகலாம் எனவும் கருதப்படுகின்றது. சதாம் ஹுசேன் தொடர்பான இந்த வழக்கு விசாரணைகளை அமெரிக்க இராணுவத்தினரே தொலைக்காட்சிக்கென ஒளிப்பதிவு செய்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய வனம்



எழுதுபவர்: [illegible]

நிமலி சிங்களப் பிள்ளை. கரீம், ஹன்சா இருவரும் இரட்டையர்கள்-முஸ்லிம்கள். சுரேஷ் இந்துப் பையன். ரஞ்சன் கிறிஸ்தவ மாணவன். இவர்களெல்லாம் ஐந்தாம் வகுப்பிலே படிப்பவர்கள். நகமும் சதையும் போல, கண்ணும் இமையும் போல மிக நெருக்கமான கூட்டாளிகள். ஒவ்வொரு பிள்ளைகளும் ஒவ்வொரு அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். தினமும் பாடசாலைக்குச் சைக்கிளிலே வந்து போவார்கள்.

எங்கே என்ன நடந்தாலும், புதினம், கூத்து, கும்மாளம் என எது நடந்தாலும் இந்தப் பஞ்ச பாண்டவர்களை அங்கே தவறாது காணலாம். ஒருவரைப் பிரிந்து மற்றவர் தனிமைப்படுவதை மிகவும் கவலையாக உணரும் இவர்களிடையே நிமலி நன்றாக,

## அத்தியாயம் - 02

சரளமாகத் தமிழ் பேசுவாள். கோபம் வந்தால் மட்டும் தனிச்சிங்களத்திலே திட்டித் தீர்ப்பாள்.

இவர்களைப் போலவே இன்னும் பல நண்பர்கள் குழுக்கள் அப்பாடசாலையிலே அதிகமுண்டு. எல்லோருமே இரட்டைவால் கொண்ட வாண்டுகள் தான். மகிழ்ச்சி, கலகலப்புக்கு இவர்களிடம் பஞ்சமில்லை. இதனால் அச்சிறிய பாடசாலையில் எப்போதும் கூச்சலும், கும்மாளமும்தான்! ஆசிரியர்கள் இவர்களது துடியாட்டங்களைக் கண்டு கொள்வதேயில்லை. டீச்சர்கள் மாணவர்களைக் கடிந்து கொண்டாலோ அல்லது தண்டித்தாலோ அவர்களது பாடு அதோ கதிதான். எப்படியாவது அந்த டீச்சருக்கு வம்பு செய்யாமல், வால் கட்டாமல் விடவே மாட்டார்கள். இதனால் டீச்சர்மார் பிள்ளைகளை முறைப்பது, தண்டிப்பது மிக அரிது.

குமுதினி மிஸ் மட்டும் சற்று உரம். வீட்டுப்பாடம் செய்து வராத பிள்ளைகளை வெயிலில் நிற்பாட்டுவது, வகுப்பறைப் பாடங்களைச் செய்யாத பிள்ளைகளைப் பெஞ்சின் மீது ஏற்றுவது, ஸ்கூலைச் சுற்றி ஓட விடுவது, தோப்புக்கரணம் போட வைப்பது இப்படி ஏகப்பட்ட தண்டனைகள், இம்சைகள். இதனால் குமுதினி டீச்சருக்குப் பூலான்தேவியென்றும், இதே போன்ற பழக்கவழக்கமுள்ள கார்த்திக் சேருக்கு 'இடியமின்' என்றும் பட்டப்பெயர் வைத்துள்ளனர்.

குமுதினி மிஸ் வயசாகியும் இன்னும் கலியாணம் கட்டவில்லை. கிட்டப் பார்வைக் குறைபாட்டுக்காகக் கண்ணாடி போட்டிருக்கின்றார். உதட்டுச் சாயம், நகங்களுக்குப் பொலிஸ் பூசி ஹைஹீல்ஸ் செருப்பு அணிந்து சென்ட் அடித்து, எடுப்பாகத்தான் ஸ்கூலுக்கு வருவார்.

குமுதினி மிஸ் வகுப்பறையில் பிள்ளைகளுடன் முறைப்பாக நடந்து கொண்டால் அன்று அவபாடு திண்டாட்டம்தான். கண்டிப்பாக அவவின் மூக்குக்கண்ணாடி எப்படியோ அன்று மாயமாக மறைந்து விடும். கண்ணாடியைத் தேடித் தட்டுத்தடுமாறுவதை விட, பிள்ளைகளுடன் கனிவாகப் பேசி நடந்தால் தொல்லை இல்லை என்பது அவவிற்கு நன்கு தெரியும்.

மற்றைய ஆசிரியர்களின் நிலைப்பாடும் இதே மாதிரியேதான். சேர்மாரின் சைக்கிள் டயர்கள் எத்தனையோ தடவைகள் பிள்ளைகளின் குண்டூசித் தாக்குதலுக்கு இலக்காகிப் பஞ்சர் ஆகியுள்ளன. அப்போதெல்லாம் சேர்மார் ஸ்கூல் விட்டுச் சைக்கிளைக் காட்டுப் பாதையினூடாக உருட்டிக் கொண்டு வேகாத வெயிலில் தமது ஊருக்கு 'நடராஜா சேவை' தான். கார்த்திக் சேர் இப்படிப் பல தடவைகள் அவதிப்பட்டுள்ளார். முகிடீன் சேர் தனது சைக்கிள் சீட்டில் யாரோ தார் பூசி வைத்ததைக் கவனியாமல் ஏறி ஓடி ஊர் மனைக்குள் சனங்கள் நிறைந்த கடைத் தெருவில் இறங்கியபோது அவரது வெள்ளை வேஷ்டி தாருடன் சேர்ந்து சீற்றில் ஒட்டிக் கொள்ள, வேஷ்டி அவிழ்ந்து கீழே இறங்க, இனதச் சனங்கள் வேடிக்கை பார்த்துக் 'கொல்' எனச் சிரிக்க, அது மாஸ்டருக்குப் பெரிய அவமானமாகி விட்டது.

மறுநாள் கொவ்வைப்பழம் போல் சிவந்த கண்களுடன் ஸ்கூல் வந்த மொகிடீன் சேர் நேற்று நடந்த விசயத்தைப் பெரிய சேரிடம் முறையிடக் காலைக் கூட்டத்தில் மாணவர்கள் முற்ற வெளியிலே விசாரணைக்காக நிறுத்தப்பட்டனர்.

எல்லா மாணவர்களும் 'கப்சிப்'. அதிபர் கேட்ட கேள்விக்கு யாருமே பதில் சொல்லவில்லை. முடியாத பட்சத்தில் ஒரு மாணவனைக் கூப்பிட்டு அடிப்பதற்காகக் கையை நீட்டச் சொல்ல அதைப் பார்த்த சகல மாணவர்களும் தத்தமக்கும் அடிக்கு மாறு கைகளை நீட்ட எதுவுமே செய்ய முடியாமல் மாணவர்களின் ஒற்றுமைத்தனத்தால் அதிபரும் ஆசிரியர்களும் திக்குமுக்காடிப் போயினர்.



யாரோ சில வாண்டுகள் குமுதினி மிஸ்ஸின் கதிரையிலே நெருஞ்சி முட்களைக் குத்தி

# வாண்டுப் பட்டாளத்தின் தொல்லைகள்

> ஒரு மாணவனை
> அடிப்பதற்காகக்
> கையை நீட்டச்
> சொல்ல
> அதைப்பார்த்த சகல
> மாணவர்களும்
> தத்தமக்கும்
> அடிக்குமாறு
> கைகளை நீட்ட
> மாணவர்களின்
> ஒற்றுமைத்தனத்தால்
> அதிபரும்
> ஆசிரியர்களும்
> எதுவுமே
> செய்ய முடியாமல்
> திக்குமுக்காடிப்
> போயினர்

வைக்க, ஸ்கூலுக்குப் பிந்தி வந்த அவசரத்திலே ஓடி வந்து கதிரையிலே உட்கார, அங்கே பரப்பிச் செருகி வைக்கப்பட்டிருந்த நெருஞ்சி முட்கள் டீச்சரின் இருக்கைப் பகுதியைப் பதம் பார்க்க, அந்த நேரம் பார்த்து ஸ்கூல் இன்ஸ்பெக்டர் வகுப்புப் பரிசோதனைக்காக வகுப்பறைக்குள் நுழைய, உடுக்கை இழந்தவன் கைபோல குமுதினி மிஸ் அந்தரப்பட, டீச்சர் பதறுவதைக் கண்ட இன்ஸ்பெக்டர் என்னவோ ஏதோவென்று விழிக்க, வலியையும் தாங்கிக் கொண்டு, கதிரையிலே நிறைய மூட்டைப் பூச்சிகள் என்று சொல்லிச் சமாளித்து வந்தவரை, கடமையைச் செய்து முடித்து அனுப்புவதற்குள் டீச்சருக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. அதன் பிறகு டீச்சருக்குப் பொத்துக் கொண்டு வந்த கோபத்துக்கு ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகளுக்கெல்லாம் செமையடி.

டீச்சரிடம் அடிபட்ட பிள்ளைகள் கண்கலங்கி, கைகளைப் பிசைந்து வலி மாறியதும் ஆளைப் பார்த்து ஆள் சிரித்துச் சமாளித்து, டீச்சரைப் பழிவாங்க அடுத்த கட்ட நடவடிக்கைக்குத் திட்டம் போட்டனர்.

குமுதினி மிஸ் தனது கைக்குட்டையை மேசையிலே வைத்து விட்டுப் போன சமயம் பார்த்துப் பிள்ளைகள் ஏற்கனவே தமது பேக்குகளில் ஒளித்து வைத்திருந்த காஞ்சுண்டி இலைகளால் கைக்குட்டையை நன்றாகத் தடவி வைத்தனர். அன்று அதிபர் அறையில் ஆசிரியர் கூட்டம் நடைபெற்ற வேளை டீச்சர் தனது கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துள்ளார்.

பிறகென்ன! காஞ்சுண்டிச் சுணை பட்டால் கேட்கவா வேண்டும்! முகம் அரித்து, கரப்பன் போட்டு, புளியங்கொட்டை அளவுக்கு ஆங்காங்கே தடிப்புகள் போட்டுவிட்டன. முகம் வீங்கிக் கொவ்வைப்பழம் போல் சிவந்து விட்டது. விழுங்கவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் டீச்சர் பட்ட அவஸ்தையை ஜன்னல் தட்டியோரமாக ஒளிந்திருந்து பார்த்த பிள்ளைகள் ஆளுக்காள் கை கொடுத்துக் கொண்டனர். மிஸ்ஸைப் பார்க்கப் பாவமாயுமிருந்தது. அன்றிலிருந்து குமுதினி மிஸ் பிள்ளைகளை அடிக்கப் பிரம்பைத் தொட்டதே கிடையாது.

இதற்காகத்தான் குட்டி நாயுடனும், குழந்தைகளுடனும் விளையாடக் கூடாது என்று சொல்லுவார்கள். இச்சின்னஞ் சிறுசுகள் சில சமயங்களில் ஆபத்தான, அவமானப்படக் கூடிய வேடிக்கை வேலைகளைக் கூட முன் பின் யோசனையின்றிச் செய்து விடுவார்கள்.

இளம் கன்று பயமறியாதல்லவா! அவர்களிடம் மாட்டுப்பட்டு அவஸ்தைப்பட்ட வாத்திமாரிடம் கேட்டால் கதை கதையாய்ச் சொல்லுவார்கள்.

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சரிப்பை அறிந்து கொள்ள வேண்டிய சொற்கள்

| சொற்கள் | உச்சரிப்பு | பொருள் |
|---|---|---|
| ඌරා | ஊரா | பன்றி |
| ගෙදර | ගෙදර<br>கெதர<br>Get = ගෙ<br>The = ද<br>ගෙදර | வீட்டில் |
| ඇති | ඇති<br>At = ඇ<br>சத்தி = ති<br>ඇති. | வளர்க்கும் |
| සතෙකි | සතෙකි<br>ச தெකි<br>தெற்கு = තෙ<br>அக்கி = කි<br>සතෙකි | மிருகம் |
| කකුල් | කකුල්<br>ககுல்<br>மூக்கு = කු<br>කකුල් | கால்கள் |
| තිබේ | තිබේ<br>தி බේ<br>Basin = බේ<br>තිබේ. | உண்டு |
| ඌරාට | ඌරාට<br>ஊராට<br>பட்டம் = ට<br>ඌරාට | பன்றிக்கு |
| ඇස් | ඇස්<br>ඇஸ்<br>At = ඇ<br>ඇස් | கண்கள் |
| දෙකක් | දෙකක්<br>දෙකக்<br>Then = දෙ<br>பக்கம் = ක<br>දෙකක් | இரண்டு |
| වල්ගයක් | වල්ගයක්<br>வல்ගயக்<br>Gum = ග<br>වල්ගයක් | ஒரு வால் |
| ඌරන්ට | ඌරන්ට<br>ஊரன்ට<br>பட்டம் = ට<br>ඌරන්ට | பன்றிகளுக்கு |
| චීන | චීන<br>சீன<br>பூச்சி චී<br>චීන | சீன |







ඌරා ஊரா பன்றி பற்றிய ஓர் உரையாடல்

ඌරා ගෙදර ඇති කරන සතෙකි.
ஊறா கெதற ඇති கறன சதெகி.
பன்றி வீட்டில் வளர்க்கப்படும் ஒரு மிருகம்

මිනිස්සු ඌරු මස් කති.
மினிஸ்சு ஊறு மஸ் கதி.
மனிதர் பன்றி இறைச்சி சாப்பிடுவர்




ඌරාට කකුල් හතරක් තිබේ.
ஊராට கக்குல் ஹதரக் திබේ.
பன்றிக்கு நான்கு கால்கள் உண்டு

ඌරාට ඇස් දෙකක් තිබේ.
ஊராට ඇஸ் தெகக் திබේ.
பன்றிக்கு இரண்டு கண்கள் உண்டு

ඌරාට කන් දෙකක් ද තිබේ
ஊராට கண் தெகக் ද තිබේ
பன்றிக்கு இரண்டு காதுகள் உண்டு

ඌරාට වල්ගයක්ද තිබේ.
ஊராට வல்ගயக்ද திබේ.
பன்றிக்கு ஒரு வாலும் உண்டு



සුදුපාට ඌරන්ට චීන ඌරන් කියති.
சுදුபாට ஊரன்ට சீன ஊறன் கியதி.
வெள்ளை நிறப் பன்றியைச் சீனப் பன்றி என்பர்

කළුපාට ඌරන්ට ගම් ඌරන් කියති.
கழுபாට ஊரன்ට கம் ஊரன் கியයதி.
கறுப்பு நிறப் பன்றியை நாட்டுப் பன்றி என்பர்

## வாசிப்பு - කියවීම

### ඌ - ඌ

### පින්තූර

ඌ ඌරා ඌරු මියා

ඌරා ඌරු මියා

| ඌරා | |
|---|---|
| ඌ | රා |
| ஊ | ரா |

| ඌරු මියා | | | |
|---|---|---|---|
| ඌ | රු | මි | යා |
| ஊ | ரு | மீ | யா |

මිනිස්සු ඌරු මස් කති.
மினிஸ்சு ஊரு மஸ் கதி.

ඌරු මියා අල කනවා.
ஊரு மீயா அள கனவா

### අභ්‍යාසය - அப்பியாசம்

1. கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்

உ + ம் රා
ඌරා

i. ඌ ______ ii. ඌ______මියා iii. ___රු මියා

iv. ඌරුමි______ v. ඌරු______යා

vi. மினிஸ்சு ___________கனவா

vii. ___________அள கனவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட்!

19 வயதிற்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளை இலங்கையில் நடத்துவதற்குச் சர்வதேச கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்ற சர்வதேசக் கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழு மாநாட்டில் எடுக்கப்பட்ட இம்முடிவின்படி இப்போட்டிகள் 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறும்.

முன்னதாக மலேஷியாவும் இப்போட்டிகளை நடத்துவதற்கு விண்ணப்பித்திருந்தது. இருப்பினும் இலங்கை மைதானங்கள், ஹோட்டல்கள் ஆகியன நல்ல நிலையில் உள்ளனவா? என ஆய்வுகளை மேற்கொள்ளவென இலங்கை வந்திருந்த குழுவொன்று இலங்கையில் மைதான அரங்குகள் தரமுடன் இருப்பதாக உறுதிப்படுத்தியதையடுத்தே இலங்கையில் மேற்படி போட்டிகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## ஹொக்கிப் போட்டிகள்!

33 ஆவது தேசிய கனிஷ்ட ஹொக்கிப் போட்டிகளை ஓகஸ்ட் 25 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை பதுளை வின்சன்ட் டயஸ் விளையாட்டரங்கில் நடத்துவதற்கு இலங்கை ஹொக்கிச் சங்கம் தீர்மானித்துள்ளது.


இலங்கை உட்பட 8 நாடுகள் கலந்து கொள்ளவுள்ள, தெற்காசிய விளையாட்டுப் போட்டி



களைப் பங்களாதேஷில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்குரிய திகதி இன்னமும் தீர்மானிக்கப்படாமையினால் குறித்த தேசிய கனிஷ்ட ஹொக்கிப் போட்டித் திகதிகளில் மாற்றங்கள் நிகழலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நடைபெறவுள்ள தெற்காசியப் போட்டிகளில் கலந்து கொள்கின்ற இலங்கை அணியினர்க்கு இதுவோர் பயிற்சிக் களமாக அமையவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 2012இல் லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள்




2012 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை இங்கிலாந்தில் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு எந்த நாட்டிற்கு அனுமதி வழங்குவது என்பது குறித்துத் தீர்மானிக்கும் பொருட்டுச் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினர்கள் மத்தியில் வாக்கெடுப்பொன்று சிங்கப்பூரில் நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் லண்டன், பரிஸ், மொஸ்கோ, மெட்ரிட், நியூயோர்க் ஆகிய நகரங்கள் போட்டியிட்டன.

இறுதியில் பரிஸ், லண்டன் நகரங்களுக்கிடையே கடும் போட்டி நிலவிய நிலையில் 54-50 என்ற வாக்குகளின் அடிப்படையில் லண்டன் நகரம் வெற்றியீட்டி, 2012 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டது.

### ஒலிம்பிக் போட்டிகள் இதுவரை நடைபெற்ற நடைபெறவுள்ள நகரங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| 1896 | - ஏதன்ஸ் |
| 1900 | - பரிஸ் |
| 1904 | - சென்ர் லொயுஸ் |
| 1908 | - லண்டன் |
| 1912 | - ஸ்டொக்ஹோம் |
| 1920 | - என்ட்டர்ப் (பெல்ஜியம்) |
| 1924 | - பரிஸ் |
| 1928 | - அம்ஸ்டர்டாம் |
| 1932 | - லொஸ் ஏஞ்சல்ஸ் |
| 1936 | - பேர்லின் |
| 1948 | - லண்டன் |
| 1952 | - ஹெல்சிங்கி |
| 1956 | - மெல்பேர்ன் |
| 1960 | - ரோம் |
| 1964 | - டோக்கியோ |
| 1968 | - மெக்ஸிகோ |
| 1972 | - முயூனிச் |
| 1976 | - மொன்ட்ரியல் |
| 1980 | - மொஸ்கோ |
| 1984 | - லொஸ் ஏஞ்சல்ஸ் |
| 1988 | - ஸியோல் |
| 1992 | - பேர்ஸிலோனா |
| 1996 | - எட்லாண்டா |
| 2000 | - சிட்னி |
| 2004 | - ஏதன்ஸ் |
| 2008 | - பீஜிங் |
| 2012 | - லண்டன் |

## றகர் போட்டியில் இஸிபத்தான வெற்றி

மேல்மாகாண சபையின் பாடசாலை றகர் கழகத்தின் அனுசரணையின் கீழ், அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான றகர் போட்டியில் மூன்று பிரிவுப் போட்டிகளிலும் கொழும்பு இஸிபத்தான கல்லூரி வெற்றி பெற்றுள்ளது. 14, 16, 18 ஆகிய வயதிற்குக் கீழ்பட்ட பிரிவுகளில் நடைபெற்ற இப்போட்டிகளின் இறுதிப் போட்டிகள் கொழும்பு ஹவலொக் மைதானத்தில் நடைபெற்றன.

18 வயதிற்குட்பட்டோருக்கான இறுதிப் போட்டியில் இஸிபத்தான கல்லூரியும், கொழும்பு புனித பீற்றர்ஸ் கல்லூரியும் போட்டியிடவிருந்த போதிலும் புனித பீற்றர்ஸ் கல்லூரி போட்டியில் பங்குபற்ற வருகை தராமையினால் இப்போட்டியில் இஸிபத்தான கல்லூரிக்குப் போட்டியின்றி வெற்றி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## எஃப்.ஏ கிண்ணக் கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் ரட்ணம் - சவுண்டர்ஸ் கழகங்கள்

ஜுலை 24ம் திகதியன்று நடைபெறவுள்ள, ஹொல்ஸிம் எ.ஃப்.ஏ.கிண்ண அனைத்துக் கழக உதைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் சவுண்டர்ஸ் கழகமும், ரட்ணம் கழகமும் போட்டியிடவுள்ளன.

முன்னதாகக் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் வென்னப்புவ 'நிவ்யங்க்ஸ்' கழகத்தை 2-1 என்ற கோல் கணக்கில் சவுண்டர்ஸ் அணி வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. அவ்வாறே கடற்படை அணியினை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு ரட்ணம் கழகம் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் 1999/2000 வருட காலப்பருவத்தில் இதே அணிகள் இரண்டும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்ததோடு அப்போட்டியில் ரட்ணம் கழகம் வெற்றி பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடைபெற்றுள்ள எ.ஃப்.ஏ.கிண்ண போட்டிகளில் சவுண்டர்ஸ் கழகம் 5 தடவைகளும், ரட்ணம் கழகம் 2 தடவைகளும் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளன.

## டொம் மூடிக்கு ரூ.62 இலட்சம் மதிப்புள்ள ஜீப்



இலங்கை அணியின் புதிய பயிற்றுனராகப் பொறுப்பேற்றுள்ள டொம்மூடியின் பாவனைக்காக ரூ.65 இலட்சம் பெறுமதியான சொகுசு ஜீப்பொன்றை வழங்குவதற்கு இடைக்காலக் கிரிக்கெட் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. டொம்மூடிக்கென மாதாந்தம் இலங்கை நாணயப்படி 15 இலட்சம் ரூபா அளவில் செலவிடப்படுகின்றதாகவும் அறியவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு 12, கணபதி இந்து மகளிர் வித்தியாலயத்தில், கல்வி அமைச்சின் அனுசரணையுடன் முதலாம் மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது, சிவாச்சாரியார் அத்திவாரக் கல்லுக்குத் தீபம் காட்டுவதையும், அதிபர் திருமதி தணாசுப்பிரமணியம், உப அதிபர் அ.தேவராஜ் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படப்பிடிப்பு : தம்பிஜயா தேவதாஸ்)



பலாங்கொடைத் தமிழ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடந்த வருடாந்த விளையாட்டுப் போட்டியின் போது தரம் 2 ஐச் சேர்ந்த மாணவர்கள் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்ள ஆயத்தமாவதைப் படத்தில் காணலாம்.



'விழா உலா' விஜய் தபெஎண் 2037 கொழும்பு

# கடவுள்



கடவுள் நம்மைப் படைத்தவராம்
கருணை மிகவும் உடையவராம்
காலம் முழுதும் கனிவுடனே
காத்து, வளர்த்து வருபவராம்!

இயற்கை எல்லாம் அவர் படைப்பாம்
இம்மை மறுமை அவர் பொறுப்பாம்
உயிர்களெல்லாம் அவர் சொத்தாம்
உணவு கொடுத்துக் காப்பவராம்!

கதிரும், மதியும் அவரருளாம்
காற்றும் மழையும் அவர் பொருளாம்
வானம், பூமி எல்லாமே
வல்லோன் இறைவன் வசமாமே!

சொர்க்கம் நரகம் தருபவராம்
சொந்த பந்தம் அற்றவராம்
தொழுது, வணங்கி அடி பணிந்தால்
சுகமும், நலமும் தருவாராம்!

கலை அமுதன்
எம்.சீ.எம்.இக்பால்





சி.ரபீந்திரநாத், தரம் - 02,
பரமேஸ்வரா த.வி,
மடுல்கலை.



சி.ஸியாமிகா, தரம் - $07^{A}$,
வ/சைவப்பிரகாச ம.க,
வவுனியா.



பி.சஜீவன், தரம் - $09^{B}$,
யாழ்/இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



எஃப்.சராஹா,
தரம் - $06^{A}$,
அல்-ஹம்றா ம.வி,
தர்கா நகர்.




'கைவண்ணங்கள்'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு



அனீஸா மன்ஸூர்
தரம் - $10^{B}$,
பதியுத்தீன் மஹ்மூத்
பெ.க, கண்டி.



கே.கிரிஷாந்தன், தரம் - 05,
நோர்வூட் த.ம.வி,
நோர்வூட்.



எம்.சஹானா, தரம் - 04,
ஸ்ரீ சண்முகானந்தா த.வி,
திக்வெல்ல.




எம்.சபான், 08,
ஸாஹிரா க.
மாவனெல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்குப் புதிர் 1

இரண்டு இலக்கங்களால் ஆன ஒரு இலக்கம், மீதி இன்றி 6 ஆல் வகுக்கலாம். மீதி இன்றி 5 ஆலும் வகுக்கலாம். 4 ஆல் வகுத்தால் மீதி 2. 7ஆல் வகுத்தாலும் மீதி 2. இது 20 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட இலக்கம் அந்த இலக்கம் எது?

## வழி காட்டுங்கள் 2








1,2,3,4, என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளைத் தபாலுறையிலிட்டு முகவரிக் கூப்பனை வெட்டி ஒட்டி மாணவர் பெயர், வகுப்பு, பாடசாலை, பாடசாலை முகவரி, நிரந்தர முகவரி, அருகில் உள்ள நகரம், மாவட்டம் முதலான விபரங்களுடன் தபாலில் அனுப்பவும். ஒவ்வொரு பகுதியில் இருந்தும் தெரிவு செய்யப்படும் ஓர் அதிர்ஷ்டசாலிக்குச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்)தலா ரூ.150/= பெறுமதியான பண வவுச்சர்களைக் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கும்.

**முகவரிக் கூப்பன்**

அற்லஸ் அறிவுக்கு விருந்து 22
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

## 3

A-F என முறையாகக் குறிப்பிடப்பட்டுள்ள பறவைகள், எந்த நாட்டின் தேசியப் பறவை என்பதை இணைத்துக் காட்டுக.




| குறிக்கும் எழுத்து | | பறவையின் பெயர் | நாடு |
|---|---|---|---|
| A | → | எமு | இங்கிலாந்து |
| B | → | கிரிம்ஸன் சன்பேர்ட் | இந்தியா |
| C | → | கிவி | அவுஸ்திரேலியா |
| D | → | ரொபின் | இலங்கை |
| E | → | மயில் | சிங்கப்பூர் |
| (உ+ம்)F | → | காட்டுக்கோழி | நியூசிலாந்து |

## 4

**குறித்த சொல்லுடன் தொடர்புடைய 4 தகவல்களில் ஒரு தகவல் பிழையானது. அதன் கீழ்க் கோடிடுக.**

அ. திமிங்கிலம்
* ஆழ் கடலில் வாழ்கின்ற மிகப் பெரிய முலையூட்டி.
* இந்த மீனினம் நீரிலும், நிலத்திலும் வாழ்வதற்கு ஏற்ற உடலமைப்பைக் கொண்டுள்ளது.
* கடலில் வாழ்கின்ற சிறிய மீன்களை உணவாக உட்கொள்கின்றது.
* சுவாசப்பையின் உதவியுடன் சுவாசிக்கின்றது.

ஆ. டெங்கு நோய்
* 'ஆபோ' எனப்படும் வைரஸினால் ஏற்படுகின்றது.
* இதுவொரு தொற்று நோயாகும்.
* ஓடிக் கொண்டிருக்கும் சுத்தமான நீரில் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகள் முட்டை இடுகின்றன.
* இந்நோயைப் பரப்பும் நுளம்புகளின் உடம்பில் கரும்புள்ளிகள் இருப்பதோடு கால் பாதங்களில் வெள்ளை நிறக் கோடுகளையும் காணலாம்.

இ. லிபர்ட்டி சிலை
* அமெரிக்காவுக்கு ரஷ்யாவினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.
* அமெரிக்கா-பிரான்ஸ் நாடுகளுக்கிடையிலான நட்புறவை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது.
* லிபர்ட்டி தீவில் உள்ளது.
* அமெரிக்காவின் சுதந்திரத்தை ஞாபகப்படுத்துவதால் இது 'சுதந்திரச சிலை' எனவும் அழைக்கப்படுகின்றது.

### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 19 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

| போட்டி : 01 | போட்டி : 02 | போட்டி : 03 | போட்டி : 04 |
|---|---|---|---|
| அர்ஹம் அன்வர், தரம் - 06, ப/அல் யாசின் மு.வி, பண்டாரவளை. | க.ராமேஸ்வரி, தரம் - 09, களு/சாந்தமேரி ம.ம.வி, மத்துகம. | எஸ்.கிருஷ்ணப்பிரியா, தரம் - $08^{B}$, வெட்டாளை ஹசன் குத்தூஸ் மு.வி, புத்தளம். | ஏ.எல்.எம்.ஹுசைன், தரம் - 07, க/தெனு/அஸ்ஸிராஜ் ஆ.வி, நெல்லங்க. |

## குறுக்கெழுத்துப் போட்டி, இல. 33

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 ன் | ■ |
| | ■ | 5 | | | |
| ■ | 6 | | | | ■ |
| 7 ன | | | | | ■ |
| ■ | | ■ | ■ | 8 | 9 |
| 10 | | | | ■ | |

**5** **அற்லஸ் வழங்கும் 5 ஆம் இலக்கத்திற்குரிய பரிசினை, இக் குறுக்கெழுத்துப் போட்டியை நிரப்பி வெற்றி கொள்ளுங்கள்.**

**மேலிருந்து கீழ்**
1. ஹிட்லரின் தலைமையில் உருவான கட்சி.
2. இலங்கையிலுள்ள நீர்வீழ்ச்சி ஒன்று.
3. மதிப்புக்குரியவர் (குழம்பி).
4. இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துவது (குழம்பி).
6. தேய்பிறையின் கடைசி நாள்.
9. நிறை.

**இடமிருந்து வலம்**
1. கடவுள் பக்தி இல்லாதவர்கள்.
5. இந்தியாவின் வடக்கேயுள்ள மலைத்தொடர் (குழம்பி).
6. தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் அரச ஊழியன்.
7. பேரரசன் (குழம்பி).
8. முயல், அணில் போன்றவற்றின் இனத்தைச் சார்ந்த ஒரு விலங்கு (மாறி).
10. இறைச்சி, மீன், சேர்க்கப்பட்ட உணவுகளை இப்படி அழைப்பர்.

பெயர் :-..............................
நிரந்தர முகவரி :-..............................
பாடசாலை :-..............................
பாடசாலை முகவரி :-..............................
வகுப்பு :-..............................
அருகில் உள்ள நகரம் :-..............................
மாவட்டம் :-..............................

### போட்டி விதி முறைகள்

1. சரியான விடைகளை உரிய சதுரக் கட்டங்களில் நிரப்பிக் கீழேயுள்ள கூப்பனையும் பூர்த்தி செய்து, தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 2005.07.28ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் குறுக்கெழுத்துப் போட்டி - 31, பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி
ம.நளினி, தரம் - 13, புனித மரியாள் த.வி, புத்தளம்.

எமது முகவரி

குறுக்கெழுத்துப் போட்டி -33
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### போட்டி. இல - 31இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பொ | னி | 2 பி | ளே | 3 ய | ர் |
| ன | ■ | ளா | ■ | 4 சு | ■ |
| 4 மு | 5 வே | ந் | 6 த | ர் | ■ |
| 7 ர் | க | த | ர | ■ | 8 வ |
| ■ | 9 மா | ன் | ம் | 10 மி | ய |
| 11 ஞா | னி | ■ | ■ | 12 கை | து |

**பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்**

* அப்துல் பாசித், தரம் - $08^{B}$ கமு.அல்மனார் ம.க, மருதமுனை - 03
* நா.ரகுநாத், தரம் - 09, புளும்பீல்ட் த.வி, மஸ்கெலியா.
* ர.பா.சில்மியா, தரம் $09^{B}$, பது/தமிழ் ம.ம.வி, பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# இந்து சமுத்திரத்தை ஆக்கிரமித்தல்

அத்தியாயம் 11

1 அடுத்துப் போர்த்துக்கேயர் ஏடன் துறைமுகத்தைக் கைப்பற்றுவதை ஒரே குறிக்கோளாகக் கொண்டனர். இது மத்திய கிழக்குக்கான வாயிலாகும். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்பு வெற்றியாகவில்லை. பின்பு அடுத்த துறைமுகமான சொகோத்ராவைக் கைப்பற்றிக் கொண்டனர். இவ்விடம் செங்கடலின் மிக அண்மையில் அமைந்திருந்தது. யுத்த நடவடிக்கைகளின் போது இவ்விடம் போர்த்துக்கேயருக்கு அதிக உபயோகமாகவிருந்தது.

2 போர்த்துக்கேயர் சொகோத்ராவிலிருந்து செங்கடல் மீது ஆதிக்கத்தைச் செலுத்தினர். இவர்களின் இந்நடவடிக்கை முஸ்லிம்களைப் பெரிதும் பாதித்தது. முஸ்லிம்களின் வர்த்தகக் கப்பல்கள் யாவும் செங்கடலுக்கூடாகவே பிரயாணம் செய்தன. மேலும், இந்து சமுத்திரப் பிரதேசத்திற்கு உள்நுழையும் பிரதான வாயிலாகச் சொகோத்ரா அமைந்திருந்தது. நீண்ட காலமாக ஐரோப்பாவிற்குப் பொருட்களைக் கொண்டு செல்ல முஸ்லிம்கள் செங்கடல் பாதையையே பிரதான வர்த்தக மார்க்கமாகப் பயன்படுத்தி வந்தனர்.

3 இந்து சமுத்திர நாடுகளிலிருந்து பெற்ற பொருட்கள், பண்டங்களைச் சுயஸ் வரைக்கும் இம்மார்க்கமாகவே முஸ்லிம்கள் கொண்டு சென்றனர். ஏடன் துறைமுகமானது முஸ்லிம்களின் வசமிருந்ததன் காரணமாக ஏடன் தொடங்கிச் செங்கடல், சுயஸ் வரையிலான கடற் பாதை மிகப் பாதுகாப்பானதாக இதுவரை காணப்பட்டது. சுயஸிலிருந்து இறக்கப்படும் பொருட்கள் ஒட்டகங்கள் மூலம் எகிப்து நாட்டிலுள்ள கைய்ரோவிற்குக் கொண்டு செல்லப்பட்டன. அதன் பின் நைல் நதிக்கூடாக பல இடங்களிற்குக் கொண்டு செல்லப்பட்டன.








4 இவ்விதம் கொண்டு செல்லப்படும் பொருட்கள் அலெக்ஸாண்டிரியா மற்றும் வெனிசிற்கும் கொண்டு செல்லப்பட்டன. பின்பு அங்கிருந்து முழு ஐரோப்பாவிற்கும் விற்பனை செய்யப்பட்டன. இதன் மூலம் முஸ்லிம்கள் அதிக வருமானத்தைப் பெற்றுக் கொண்டனர். போர்த்துக்கேயர் சொகோத்ராவைக் கைப்பற்றியதுடன் செங்கடல் மார்க்கத்தில் பல பிரச்சினைகள் உருவாகின. முஸ்லிம்களின் கப்பல்கள் தாக்கப்பட்டன. கடுஞ்சமர் ஏற்பட்டது. இதன் காரணமாக வேறொரு மார்க்கத்தைத் தேட வேண்டிய அவசியம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது.

5 இதனால் பாரசீகக் குடாவினூடாக ஐரோப்பாவிற்குள் நுழைந்தார்கள். பாரசீகத் துறைமுகத்திலிருந்து 'பாஸ்ரா' வரை கடலில் சென்று அங்கிருந்து "அல்பொவடத்", டெர்ப்சொண்ட்" மற்றும் "டமாஸ்கா" வரை கப்பலில் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன. இம் மார்க்கத்திற்கு "ஓர்மஸ்" நாடு பாதுகாப்பினை வழங்கியது. இதனை அறிந்த கொண்ட போர்த்துக்கேயர் அதனையும் தடை செய்ய முயன்றனர்.

6 இதன் பின்பு போர்த்துக்கேயர் கடற் படையுடன் பாரசீகக் குடாவிற்குச் சென்றனர். அங்கு பயங்கர யுத்தமொன்று நடைபெற்றது. இரு தரப்பினரிலும் பெருந்தொகையானோர் இறந்தனர். இதில் வெற்றி பெற்ற போர்த்துக்கேயர் பாரசீகக் குடாவின் மிகக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த "ஓர்மஸ்" நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். இது முஸ்லிம்களின் வர்த்தகத்திற்குப் பேரிடியாக அமைந்தது. அதன் பின் செங்கடல் மார்க்கம் போல் இம் மார்க்கத்தையும் போர்த்துக்கேயர் தடை செய்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org